விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினான்கு — Valampurii


சங்கு 10 · வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 13 ஞாயிற்றுக்கிழமை (28.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# புலிகள் பாரிய தாக்குதலை நடத்தி இழந்த நிலங்களை மீட்டெடுப்பர்



## குமுதம் வார இதழுக்கு பா.நடேசன் பரபரப்புப் பேட்டி

(சென்னை)

கிளிநொச்சியைப் பிடித்தே தீருவதென்று படைத் தலைமை விடாப்பிடியாக முயற்சிகளை மேற்கொள்கிறது. கிளிநொச்சியை தற்காத்தே ஆகவேண்டுமென்று புலிகள் இயக்கம் வீராவேசமாக போராடுகிறது. இதனால் கிளிநொச்சி நகரமே போர்க்களமாக காட்சி தருகின்றது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல்

### 2 சிறுவர் உட்பட மூவர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் விமானப்படை நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் இருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளதுடன் பெருமளவு வீடுகளும் சேதமடைந்துள்ளன என (14ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு தமிழகத்தில் ஆதரவு அதிகரிப்பு

## கொதிக்கிறது காங்கிரஸ்; பாய்கிறது திருமாவளவன் மீது

(சென்னை)

ஈழத்தமிழர் ஆதரவு என்று ஆரம்பித்து மெல்ல மெல்ல காங்கிரஸ் எதிர்ப்பு போக்கில் உக்கிரம் காட்டிவரும் கட்சிகளால் தமிழக காங்கிரஸ் கட்சி வட்டாரம் கொந்தளித்துள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளின் போக்குக் குறித்து விவாதிக்க, தமிழக காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் விரைவில் கூடுகிறது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவுக் கட்சிகள் பற்றி இறுதி முடிபெடுக்கப்படும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்தார்.

அதன் எதிரொலியாக தமிழகம் முழுவதும் (14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...



ஈழத் தமிழருக்கு ஆதரவாக முதல்வர் மு.கருணாநிதி ஆவேச உரை

2009ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி? மேடம்

## புலிகளின் முக்கிய தளங்கள் மீது விமானத் தாக்குதல்–படையினர்

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது விமானப்படையினர் நேற்று 4 தடவைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளங்கள் பல அழிக்கப்பட்டிருப்பதாக இராணுவ தலைமையகம் தெரிவித்திருக்கின்றது.

இரணைமடு, முல்லைத்தீவு, விசுவமடு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் இந்த விமானக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாகவும் (14ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் எறிகணை,வான் தாக்குதலில் இளம் பெண் பலி; பத்துப் பேர் காயம்

(கிளிநொச்சி)

இரணைமடு மற்றும் இயக்கச்சி பகுதிகளில் படையினர் நடத்திய எறிகணை மற்றும் வான் தாக்குதல்களில் இளம் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இயக்கச்சிப் பகுதியில் நேற்று ஓலை வெட்டச் சென்றவர்கள் மீது படையினர் எறிகணைத் தாக்குதல் நடத்தினர். இதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர் தவமலர் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். அஜந்தா (வயது 18), (14ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேரமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அமுலிலுள்ள ஊரடங்கு இன்றும் நாளையும் நள்ளிரவு 12 மணிவரை தளர்த்தப்படுமென படையினர் அறி வித்துள்ளனர்.

இதன் பிரகாரம் இன்றும் நாளையும் நள்ளிரவு 12 மணிக்கு அமுல்படுத்தப்படும் ஊரடங்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களுக்கு நியாயமான சுயாட்சியை அவர்களின் தாயகத்தில் ஏற்படுத்த வேண்டும்

### பொஸ்ரன் குளோப் ஏடு தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கை அரசை அமைதிவழிக்குக் கொண்டுவந்து தமிழ் மக்களுக்கு நியாயமான சுயாட்சியை அவர்களின் தாயகத்தில் ஏற்படுத்த வேண்டும் என்றால் அதற்கு போர் நிறுத்தப்படுவதே ஒரே வழி என்று பொஸ்ரன் குளோப் ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொஸ்ரன் குளோப் ஏட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசியாவின் மிக நீண்ட உள்நாட்டுப் போர் வன்முறையின் உச்சத்தை அடைந்துள்ளது.

அரசியல் தீர்வு ஏற்படுத்தும் பொருட்டு போர் நிறுத்தமொன்றை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து வந்த எங்களை கைதிகள் போல் நடத்துகின்றனர்

### வவுனியாவில் தங்கியிருப்போர் அமைச்சர் பதியுதீனிடம் முறையீடு

(வவுனியா)

அரசின் வேண்டுகோளை ஏற்று இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த தாங்கள் கைதிகள் போல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தங்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கு அனுமதி வழங்குமாறும் இடம் பெயர்ந்த வன்னி மக்கள்,. மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இளைஞன் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா கணேசபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞனொருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் தலையில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் இவரது சடலம் நேற்றுக் காலை கணேசபுரம் வீதியோரத்தில் (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண சர்வகட்சிக் குழுவாலேயே முடியும்

## அமெ. தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் கருத்து

மனித உரிமை நிலைமைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு மிகவும் முக்கியமானது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்தார். அண்மையில் கொழும்பு வர்த்தக சமூகத்துடனான சந்திப்பின் போதே மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கும் இலங்கையில் உள்ள சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கும் மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்படுத்தப்படுவது அவசியம் எனச் சுட்டிக்காட்டிய அமெரிக்கத்தூதுவர், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைப்பதற்கு ஒரு சிறந்த வழி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஊடாக தீர்மானம் ஒன்றை எட்டுவதே. அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் 90 வீதமான தீர்வு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவால் எட்டப்பட்டுவிட்டது. இது சிறந்த தொரு சந்தர்ப்பம் என இலங்கையர்கள் நம்புகின்றனர் எனத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு, மனித உரிமை நிலைமைகளை முன்னேற்றுதல் மற்றும் தற்பொழுது இலங்கையில் தோன்றியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினை ஆகிய மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு பற்றி ரொபேர்ட் ஓ பிளேக் வர்த்தக சமூகத்தினருக்கு விளக்கமளித்தார்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட முடியாதென்பதுடன் தமிழர்களின் அனைத்து உரிமைகளும் அரசியல் தீர்வு மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கும் பொருளாதார பிரச்சினையை எதிர்கொள்வதற்கும் அமெரிக்கா தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு தொடரும் எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## தரம்-5 ஆசிரியர்களுக்கான விஷேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-5 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஷேட கலந்துரையாடல் ஒன்று நாளைக் காலை 8.30மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி க. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ந-5)

# பாதுகாப்பு செயலர், இராணுவ தளபதி ஆகியோருக்கு மனித உரிமை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜ



பக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் கட்டளைத் தளபதி லலித் தெளலாகல ஆகியோரை ஜனவரி 23 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு மீதான விசாரணையை மேற்கொண்டதையடுத்து ஓய்வு பெற்ற நீதிபதி ஜி.டபிள்யூ எதிரிசூரிய நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

2008 ஆகஸ்ட் 14ஆம் திகதி மடு மாதா தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜயலத் ஜெயவர்த்தன எம்.பி. யை கட்டாயத்தின் பேரில் அங்கிருந்து செல்லுமாறு 61ஆம் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி லலித் தெளலாகல வற்புறுத்தியமை தொடர்பிலேயே அரசியல் அமைப்பின் 12-14ஆம் சரத்துகளுக்கமைய மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, 61ஆம் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி லலித் தெளலாகல ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்,

அத்துடன் இந்நாட்டில் வாழும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மற்றும் பௌத்தம் என்ற வேறுபாடு இல்லாமல் எவரும் தமது சமய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமை இருக்கின்றது என்றும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பாதுகாப்பு செயலாளர் ஆணைக்குழுவில் ஆஜராகாது இருந்த அதேநேரம் அவரது சட்டத்தரணி கே.எஸ். கரியபெரும மாத் திரமே சமுகமளித் திருந்தார்.



இதேவேளை மனுதாரரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மன் பெர்னாண்டோ, கே.ஏ.சி குமாரகே, எஸ்.எஸ். எம். சம்சுடீன் ஆகியோர் பிரதிவாதி ஆணைக் குழுவில் ஆஜராகாதது தொடர்பில் சுட்டிகாட்டியதுடன் இராணுவத் தளபதியையும் பிரதிவாதியாக இணைத்துக் கொள்ளுமாறு கோரினர்.

இதனையடுத்து இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்த ஓய்வுபெற்ற நீதிபதி ஜி.டபிள்யூ எதிரிசூரிய, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தளபதி சரத் பொன்சேகா மற்றும் 61ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி லலித் தெளலாகல ஆகியோரை ஜனவரி 23ஆம் திகதி மனித உரிமை ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (ந-5)

# புலிகள் பாரிய தாக்குதலை நடத்தி...

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் குமுதம் வார இதழின் இணையத்தளத்தில் வெளிவந்துள்ள பா.நடேசனின் நேர்காணல் வருமாறு ;

**கிளிநொச்சி நகரத்தை நான்கு முனைகளில் இருந்தும் தாக்கும் இராணுவத்தின் முன்னேற்றம் வெற்றிகரமாக தடுக்கப்பட்டதாக செய்திகள் வருகின்றன. தற்போது அங்கு நிலைவரம் எவ்வாறு உள்ளது?**

கிளிநொச்சியைப் பிடித்தே தீருவதென்று படைத்தலைமை விடாப்பிடியாக முயற்சிகளை மேற்கொள்கின்றது. கிளிநொச்சியை தற்காத்தே ஆகவேண்டுமென்று புலிகள் இயக்கம் வீராவேசமாகப் போராடுகிறது.

இதனால் கிளிநொச்சி நகரமே போர்க் களமாக காட்சி தருகின்றது.

ஒருமுனையில் தாக்குவதால் பயனில்லை. பலமுனைகளில் களங்களைத் திறந்து ஒரே சமயத்தில் தாக்குவதன்மூலம் நகரைப் பிடிக்கலாம் என படைகள் கருதியிருந்தன.

சிங்களப் படையின் இந்தப் புதிய வியூகத்தையும் புலி வீரர்களும் வீராங்கனைகளும் இப்போது முறியடித்துவிட்டனர்.

பெருந்தொகைப் படைகள் கொல்லப்பட்டதால் அரசு அதிர்ந்து போயுள்ளது. ஆனாலும் அது தனது முயற்சியைக் கைவிடுவதாக இல்லை. இப்போது கிளிநொச்சி நகரம் மீதும் மற்றும் அதன் சுற்றியுள்ள கிராமங்கள் மீதும் பெரும் எடுப்பிலான வான் தாக்குதலை முடுக்கியுள்ளது.

வானூர்திகளின் பேரிரைச்சலும் அவை போடும் குண்டுகளின் வெடிச்சத்தங்களும் காயமடையும் மக்களின் அவலக்குரலுமாக வன்னிப் பகுதி காட்சியளிக்கின்றது.

**விரைவில் கிளிநொச்சி அடுத்து முல்லைத் தீவு என புலிகள் பகுதியை முழுவதுமாக கைப்பற்றிவிடுவோம். அப்போது ஒளிந்து கொள்ள வேறு இடமில்லாமல் கடலுக்குள் சென்றுதான் புலிகள் தற்கொலை செய்ய வேண்டுமென சிறிலங்கா இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார். இதற்கு தங்களின் பதிலென்ன?**

புலிகள் இயக்கம் கடலுக்குள் குதித்து அழியவேண்டும். அல்லது சயனைட் அருந்தி சாகவேண்டும் என்று சிங்களப் பேரின வாதிகள் ஆசைப்படுகின்றனர்.

இதேபோன்ற கருத்தை முன்னர் சந்திரிகா காலத்தில் அதன் இராணுவ அமைச்சராக இருந்த ஜெனரல் ரத்வத்தையும் கூறியிருந்தார்.

இதேபோன்றுதான் பண்டைய சிங்கள மன்னனான துட்டகைமுனுவும் தமிழர்களை கடலுக்குள் தள்ளி அழிக்க ஆசைப்பட்டிருந்தான். இனவாத மரபு சார்ந்த இராணுவ ஆசைகள் நிறைவேற புலிகள் இயக்கமும் எமது மக்களும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

**பலத்த இழப்புக்களுக்கு மத்தியிலும் கிளிநொச்சியை நோக்கி இராணுவம் முன்னேறிவருவது; இராணுவம் பலமடைந்துவிட்டது என்பதைக் காட்டுகிறதா?**

கணிசமான நிலங்களை சிங்களப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன என்பது எவ்வளவு உண்மையோ அந்தளவிற்கு அகலக்கால் வைத்து சிங்களப் படைகள் பலவீனமடைந்திருக்கின்றன என்பதும் உண்மையாகும்.

ஒரு விடுதலை இயக்கத்தின் பலம் என்பது அதுவைத்திருக்கும் நிலப்பரப்பு என்பதைவிட அதனிடம் இருக்கும் படைபலம்தான் எனவேதான் நெருக்கடிகள் ஏற்படும் பொழுது நிலத்தை விட்டுக்கொடுத்து படை பலத்தை தக்கவைத்துக் கொள்வதை ஒரு மரபாக விடுதலை இயக்கங்கள் கொண்டிருக்கின்றன.

ஓடு மீன் ஓட உறுமீன் வரும்வரை வாடியிருக்குமாம் கொக்கு என்பது போல ஒருநாள் புலிகள் இயக்கம் தனது பாரிய தாக்குதலை தொடுக்கும்போது இழக்கப்பட்ட இந்த நிலங்கள் ஓரிரு நாட்களில் புலிகள் வசமாகும்.

**இராணுவத்தின் திடீர் பலத்திற்கு மற்ற நாடுகளின் உதவிதான் காரணம் எனச் சொல்லப்படுகிறது. எந்தெந்த நாடுகள் சிறிலங்காவுக்கு உதவுகின்றன?**

தனது சொந்தப் பலத்துடன் நின்றபடி எம்முடன் சிங்களப் படைகள் மோதுவதாக இருந்தால் ஒரு குறுகிய காலத்தில் வெற்றி பெற்று எமது இலக்கை அடைவோம் என்பது திண்ணம்.

ஆனால் நாங்கள் சிங்களப் படைகளுடன் மட்டும் மோதவில்லை. பல நாடுகளுடன் மோதியே எமது விடுதலையைப் பெற வேண்டும் என்ற நிலையில் இருக்கின்றோம்.

எமது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக வேண்டுமென்றே சில நாடுகள் அரசுக்கு இராணுவ உதவிகள் புரிகின்றன.

நேரடியாகவோ மறைமுகமாகவோ அந்த நாடுகளுக்கு இங்கு நலன்கள் இருக்கின்றன என நாம் சந்தேகிக்கின்றோம். எமது விடுதலைப் போரை தடுப்பதன் மூலம் அந்த நாடுகள் நன்மையடைய விரும்புகின்றன.

**வியட்நாம்போல் மக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து; அவர்களும் போரில் குதிப்பதும் குறித்து முன்பு பேசப்பட்டது. இப்பொழுது நடந்துவரும் போரில் மக்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கின்றது?**

இப்போது இங்கே நடக்கும்போர் மக்கள் போர் என்ற வடிவில்தான் நிகழ்ந்து வருகின்றது. மக்கள் அனைவருமே ஏதோ ஒருவகையில் போர்க் கடமைகளை இங்கு ஆற்றி வருகின்றனர்.

வலுவுள்ள அனைவரும் ஆயுதப் பயிற்சி பெற்றுள்ளனர். சுழற்சி முறையில் களமுனைப் பணிகளை மக்கள் தொடர்ச்சியாக ஆற்றி வருகின்றனர்.

ஆள் எண்ணிக்கையில் அதிகமுள்ள சிங்களப் படைகளை 'மக்கள் போர்' என்ற வடிவில் எதிர்கொண்டு வருகின்றோம்.

சங்கத் தமிழர் காலத்து வீரமரபு ஈழமண்ணில் இன்று நிதர்சனமாக நடைபெறுகின்றது. வீரமும்-தியாகமும்-ஒருங்கு சேர்ந்து வெளிப்படுத்தப்படும் புறநானூறுகள் ஒவ்வொரு நாளும் களத்தில் படைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**மாவீரர் நாள் உரையில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை அனைத்துலக நாடுகள் நீக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார். இதற்கான பேச்சுவார்த்தைகள் மற்றும் முயற்சியில் புலிகள் அமைப்பு ஈடுபட்டுள்ளதா?**

அதற்கு வேண்டிய அனைத்து வகையான இராஜதந்திர அரசியல் நகர்வுகளை எடுத்து வருகின்றோம். குறிப்பாக இந்திய அரசிற்கும் பல்வேறு வழிகளின் ஊடாக எடுத்துரைத்து வருகின்றோம்.

எமது கோரிக்கைகளை இந்திய மத்திய அரசு சாதகமாகப் பரிசீலிக்கும் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு.

**விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாக பழ.நெடுமாறன், வைகோ போன்ற தமிழக அரசியல் தலைவர்களுக்கு விடுதலைப் புலிகள் அமைப்பு பணம் கொடுப்பதாகவும் அவர்களை கோமாளிகள் என்றும் சரத்பொன்சேகா குறிப்பிட்டார். இதனை எப்படி எதிர்கொள்கிறீர்கள்?**

சரத் பொன்சேகாவின் கூற்று ஈழத் தமிழ் மக்கள் மீதான வெறுப்புணர்வு மட்டுமல்ல. தமிழக மக்கள் மீதும் அங்குள்ள அரசியல் தலைவர்கள் மீதும் அவருக்கு இருந்த வெறுப்புணர்வையே எடுத்துக்காட்டுகின்றது.

அண்மைக்காலமாக அவர் தமிழ் மக்கள் மீதான இனவிரோதக் கொள்கையையும் கோட்பாடுகளையும் பகிரங்கமாகவே தெரிவித்து வருகின்றார்.

இதனை இந்திய அரசும் உலக நாடுகளும் கவனத்தில் கொண்டு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க முன்வரவேண்டும்.

**தமிழக அரசியல் தலைவர்கள் இந்தியப் பிரதமரை சந்தித்த பிறகு, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவதாக முடிபானது. பிரணாப் முகர்ஜியின் வருகை ஏதாவது மாற்றத்தை உருவாக்குமா?**

இந்தியா ஒருபலமான நாடு மட்டுல்ல. இந்தப் பிராந்தியத்தின் வல்லரசும் ஆகும். இந்திய மத்திய அரசு நினைத்தால் அதிகாரத்தையும் -செல்வாக்கையும் பிரணாப் முகர்ஜியூடாக பயன்படுத்தி போர் நிறுத்தமொன்றை ஏற்படுத்தி அரசியல் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான புறச்சூழல் ஒன்றையும் உருவாக்கமுடியும்.

இந்தப் பிராந்தியத்தின் பெரு அரசு என்ற வகையில் இதைச் செய்யவேண்டிய தார்மிகப் பொறுப்பு இந்திய அரசுக்கு உண்டு என்பதும் எல்லோருடைய எதிர்பார்ப்புமாகும்.

**புலிகளின் அடுத்த கட்ட அரசியல் நகர்வு என்னவாக இருக்கும்?**

நாம் உலகின் சகல நாடுகளிடமும் அரசியல் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த விரும்புகின்றோம். குறிப்பாக இந்திய அரசுடனும்; எமது நட்புறவை மீளக் கட்டியெழுப்ப விரும்புகின்றோம் என்றும் நடேசன் தனது செவ்வியில் குறிப்பிட்டார். (ந-5)


## விற்பனைக்கு

பழந்தமிழ் இலக்கண, இலக்கிய, சமய, சாஸ்திர நூல்கள், 1939-2008 வரையான பஞ்சாங்கம், பித்தளை தாம்பாளங்கள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: A.ஜெயகணேஷ்
அரசடி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (2030)

## மணப்பெண் தேவை

திருமணமாகி, மனைவியை இழந்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 36-46 வயதுக்குட்பட்ட கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண் தேவை. சுனாமியால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களிடமிருந்து சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. விதவைகளும் விண்ணப்பிக்கலாம். மேல் விபரங்களை நேரில் பேசலாம் விண்ணப்பங்களை 10.01.2009ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விளம்பர இல. 2036

மே/பா வலம்புரி
இல.03,2ஆம் ஒழுங்கை ,பிறவுண்வீதி
யாழ்ப்பாணம். (2036)

## மருத்துவமனை உதவியாளர் தேவை

மருத்துவமனையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கு 35-48 வயதுக்குட்பட்ட பெண் பணியாளர் தேவை. உணவும் தங்குமிட வசதியும் வழங்கப்படும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். 10.01.2009ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்

விளம்பர இல. 2036
மே/பா வலம்புரி
இல. 03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (2036)

## கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

"கோ. ஆ" நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கைதடி குமரநகர் வி. கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய வி. கழகமும், மானிப்பாய் வெஸ்ரோன் வி. கழகத்தை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி வி. கழகமும், சரவணை திருவாளர் வி. கழகத்தை எதிர்த்து மயிலிட்டி ஒற்றுமை வி. கழகமும், கைதடி துர்க்கா வி. கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை நக்கீரன் வி. கழகமும் மோதவுள்ளன.

அத்துடன் இப் போட்டிகளின் இறுதிச் சுற்றுப்போட்டி 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

## வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட நாவாந்துறை, குருநகர், பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) நாளை திங்கட்கிழமை முற்பகல் 9-10 மணிவரை நாவாந்துறை கெனடி சனசமூக நிலையத்திலும், முற்பகல் 10-11 மணிவரை கொட்டடி சீனிவாசகம் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11-12 மணிவரை கொட்டடி கற்குளம் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2-3 மணிவரை சென். றோக்சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 3-4 மணிவரை றெக்கிளமேசன் சனசமூக நிலையத்திலும் ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-2)

# கோப்பாய்-கைதடி வீதி ஜனவரி முதல் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இரு வருடங்களுக்கு மேலாக மக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்படாமல் மூடப்பட்டிருந்த கோப்பாய்-கைதடி வீதி ஜனவரி 1 ஆம் திகதி முதல் மக்களின் போக்குவரத்துக்காக திறக்கப்படவுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துக்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து இப் பாதையைத் திறப்பதற்கு படை அதிகாரிகள் முன்வந்துள்ளனர்.

யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசத் தலைவர் க.முதலியார் தலைமையில் சென்ற குழுவினர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக் காரியாலயத்தில் வைத்து அமைச்சரைச் சந்தித்து கோப்பாய் - கைதடி வீதி மூடப்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கு மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் குறித்தும் குறிப்பாக விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்தும் விரிவாக எடுத்து விளக்கியதுடன் இப்பாதையைத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

இவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் மேற்படி வீதி திறப்பது குறித்து படை அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இந்த வீதியைத் திறப்பதற்குப் படையினர் முன்வந்துள்ளனர். அடுத்தமாதம் 1 ஆம் திகதியில் இருந்து மேற்படி வீதி மக்களின் பாவனைக்கு திறந்து விடப்படவிருக்கின்றது. (ஓ)

## கலந்துரையாடல்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு சகல ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் 2009 ஆம் ஆண்டிற்கான புதிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சகல ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் பாடசாலை அதிபர் திருமதி வே. சண்முகரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## குடிநீர் பெறுவதற்காக பல மைல் தூரம் செல்லும் நிலை

(கோண்டாவில்)

பண்டத்தரிப்பு சாந்தை சனசமூக நிலையத்தை சூழவுள்ள பிரதேசமானது கடந்த மாதம் ஏற்பட்ட கனமழை மற்றும் புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சந்தை அடியோடு அழிந்துள்ளது.

அத்துடன் வெள்ளம் தேங்கி நின்றதால் கிணற்று நீரைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகவும் குடிநீருக்காக பல மைல்கள் தூரம் நடக்க வேண்டியிருப்பதாகவும் அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஏற்கனவே இங்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட நீர்த்தாங்கிகளிலும் பலகாலமாக நீர் நிரப்பப்படுவதில்லை என்றும் தெரிவித்தனர். (ஓ-6-36)

## வைகுண்ட ஏகாதசி திவ்விய மஹோற்சவம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வைகுண்ட ஏகாதசி திவ்விய மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை வைகுண்ட ஏகாதசி தினத்தை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு சங்காபிஷேகமும் 6 மணிக்கு சொர்க்கவாசல் தரிசனமும் தொடர்ந்து 10 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 11 மணிக்கு சுவாமி இரதத்தில் ஆரோகணித்து பவனி வருவார். வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு திருவடி நிலையில் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

ஏனைய நாட்களில் தினமும் காலை 9 மணிக்கும், மாலை 3 மணிக்கும் திருவிழா ஆரம்பமாகி நடைபெறும். (ஓ-4)

## நிதி கிடைக்காததால் வைத்தியசாலை கட்டட வேலை இடைநிறுத்தம்

(கோண்டாவில்)

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு சாந்தை சனசமூக நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் வைத்தியசாலைக் கட்டடம் முடிவுறாத நிலையில் காணப்படுகிறது.

இதேவேளை மேற்படி கட்டடம் அமைப்பதற்கென மதிப்பிடப்பட்ட தொகையில் ஒரு சிறு பகுதியே வழங்கப்பட்டுள்ளதாகவும் மீதி வழங்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆதலால் இவ் வைத்தியசாலையை விரைவில் அமைத்து தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-6-36)

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்தக் கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அரசகேசரிப் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள முன்பள்ளி முன்றலில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளித் தலைவரும் வங்கியாளருமாகிய ச.க.முருகையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இராமநாதன் நுண் கலைப் பீட இசைத்துறை மூன்றாம் வருட மாணவர்களின் 'பக்திப்பாமாலை' நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஓ-35)

## வாரம் ஒரு தகவல்

# ஒரு நல்ல யோசனை!

"குட்மோனிங் சேர்"

"குட்மோனிங்"

"உங்களுடைய மேசையில் சில பைல்கள் வைத்திருக்கிறேன்"

"எல்லாவற்றையும் பார்த்து இன்றைக்கு கிளியர் பண்ணி விடுகிறேன் அதில் சிலவற்றை தீர்க்கமாக யோசித்து தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது"

"கரெக்ட் சேர்! நான் தினமும் ஒரு விஷயம் உங்களிடம் கவனித்திருக்கிறேன். காலையில் சரியாக 10 மணிக்கு அலுவலகத்திற்கு வந்து விடுகிறீர்கள். வந்ததும் நின்றுகொண்டே கடவுளை வணங்குகிறீர்கள். கொஞ்சநேரம் யோசிக்கிறீர்கள். அதற்குப் பின்னர் தான் உட்கார்ந்து கையெழுத்துப் போடுகிறீர்கள். அது ஏன் என்று கொஞ்ச நாளாக நான் யோசித்ததுண்டு. நேற்று பத்திரிகையில் ஒரு கட்டுரை பார்த்தேன். அதற்குப் பின்னர் தான் விஷயம் புரிந்தது"

"என்ன படித்தீர்கள்? என்ன புரிந்தது?"

"உட்கார்ந்து கொண்டு ஒரு விஷயத்தைப் பற்றி யோசிக்கிறதை விட நின்றுகொண்டு யோசிப்பது நல்லதாம். உடனடியாக ஒரு முடிவுக்கு வருவதற்கு அது உதவியாக இருக்குமாம். முக்கியமாக வயதானவர்கள், கடுமையான சூழ்நிலையில் வேலை செய்பவர்கள் இவர்களெல்லாம் நின்றுகொண்டு வேலை செய்யும்போது அவர்களுக்கு சிந்தித்து விரைவாக முடிவுக்கு வரக்கூடிய திறமை அதிகமாகிறதாம் என்று சொல்கிறார் ஒரு ஆராய்ச்சியாளர்" (Masx Vercryssen-University of Southern California)

"நீங்க சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே"

"அப்படியானால் நீங்கள் தினமும் அலுவலகம் வந்ததும் உடனே இருக்கையில் உட்காராமல் நின்றுகொண்டு யோசிக்கிறீர்களே... அதற்கு இது காரணமில்லையா?"

"இல்லை. அதற்கு காரணம் வேறு."

"என்னது?"

"தினமும் நான் அலுவலகம் வந்ததும்... என்னுடைய பாதுகாப்புக்காக நான் கடவுளை வணங்குகிறேன். என் சீட்டில் யாராவது வழக்கம்போல் குண்டுசியை செருகி வைத்திருக்கிறார்களா என்று நிதானமாக நின்று பார்க்கிறேன். அதற்குப் பின் தான் உட்காருகிறேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

28.12.2008
(மார்கழி 13, ஞாயிற்றுக்கிழமை)
பிரதமை முன்னிரவு 8.27 மணிவரை
பூராடம் முன்னிரவு 11.30 மணிவரை
இராகுகாலம் 4.58- 6.28 மணிவரை
சுபநேரம் 9.28-10.58 மணிவரை
கெர்ப்போட்டாரம்பம் பின்னிரவு 2.04

| | |
|---|---|
| மேடம் | பிதாசிந்தை, சரீரப் பிரயாசை, புதியதிட்டமிடல், கட்டுப்பாடு. |
| இடபம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், வானபயம், போசனசுகம். |
| மிதுனம் | களஷ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும், தெய்வசிந்தை, செல்வாக்கு. |
| கடகம் | விருந்துபசாரம், நல்லசெய்தி, காரியசித்தி, சுபநிகழ்வு. |
| சிங்கம் | வியாபாரசிந்தை, பூர்வ புண்ணிய கருமம், முயற்சி தாமதம், பணக் குறைவு. |
| கன்னி | புதிய முயற்சி, போசனசுகம், சுப செலவு, நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | சகோதரர் உதவி, காரிய சித்தி, பொருள் சேர்க்கை, சயனசுகம். |
| விருச்சிகம் | பணவிரயம், முயற்சி தாமதம், குடும்பக் கவலை, ரோக நிலை. |
| தனுசு | உறவினர் சந்திப்பு, நல்ல முயற்சி, போசனசுகம், சயனசுகம். |
| மகரம | காரிய அலைச்சல், சுபசெலவு, வேலைச்சுமை, போசனசுகம். |
| கும்பம் | பெரியோர் உதவி, தெய்வசிந்தை, காரிய அனுகூலம், போசன நன்மை. |
| மீனம் | அதிக பிரயாசை, முயற்சி கைகூடும், நல்ல செய்தி, நண்பர்கள் சந்திப்பு. |

வளவன்

## ஒரு நம்பிக்கையின் எதிர்பார்ப்பு

நிஜத்தின்
வருகை
"நிஷாவின்"
வருடல்களை
வாரி...
அணைத்துக் கொண்டது
◆◆◆
வாழ்வின்
வசந்தங்கள்
அச்சுப் புயலின்
போர்வைக்குள்
எச்சமாகிப்போனது
◆◆◆
அன்று
நீ தழுவிய
"மாருதம்"
ஆறுதல் தர
மறந்ததேனோ?
◆◆◆
இயல்பு நிலையை
இழந்ததால்
உன் இதயங்களை
இருட்டடிப்பு
செய்தன...
மனங்கள்
◆◆◆
உனக்குள்
ஊடுருவியது
எம்
"உயிர்ப்பு"
என்பதால்...
எமக்குள் தான்
உன்
ஜீவிப்பும்
◆◆◆
விழும்போதும்
நாம் அழுவதில்லை
இருந்தாலும்
எழும்
எம் மனதில்
நீ...
நீரூற்றி
சென்றுவிட்டாய்
அது ...
நாணய
நச்சரிபபல்ல
நம்பிக்கையின்
உச்சரிப்பு...

க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

# இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் பதற்றத்தை தணிக்க வேண்டும்

## அமெரிக்கா அறிவுரை

(வாஷிங்டன்)

இந்தியாவும் பாகிஸ்தானும் அநாவசிய போர் பதற்றத்தைத் தணிக்க வேண்டும் என்று அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

மும்பையில் நவம்பர் 26 ஆம் திகதி நிகழ்த்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தில் பாகிஸ்தானிலிருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புக்கள் தான் காரணம் என குற்றம் சாட்டப்பட்டது. பயங்கரவாத முகாம்களை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் பாகிஸ்தானுக்கு நெருக்குதல் அளித்தன.

இந்நிலையில் இந்திய எல்லையில் பாகிஸ்தான் அதிக அளவில் படைகளை குவிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இரு தரப்பினரும் அநாவசிய பதற்றத்தை தவிர்க்க வேண்டும் என்று அமெரிக்காவின் வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் கோர்டன் ஜோன்ட்ரோ கேட்டுக் கொண்டுள்ளார்.

மும்பை சம்பவம் குறித்து இரு நாடுகளுடன் இணைந்து அமெரிக்காவும் விசாரணை நடத்தி வருகிறது. இந்த சம்பவத்திற்கு பாகிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாத அமைப்புக்களான லஷ்கர்-இ-தொய்பா உள்ளிட்டவைதான் காரணம் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தனது துருப்புக்களை எல்லையை நோக்கி பாகிஸ்தான் ராணுவம் நகர்த்துவது குறித்த செய்தியும் அமெரிக்காவுக்குக் கிடைத்துள்ளது.

ஆனால் இதில் மிகவும் கவலை அளிக்கும் விடயமே இந்த துருப்புக்கள் பாகிஸ்தானின் வடமேற்கு பிராந்தியத்தில் இருந்து கொண்டு வரப்படுவதுதான். இங்குள்ள பழங்குடியினர் பகுதியில் தான் தலிபான் தீவிரவாதிகள் செயல்படுகின்றனர். ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள இந்தப்பகுதியில் தலிபான் மற்றும் அல்கெய்தா அமைப்பினர் உள்ளனர்.

தவறான யூகங்களைக் கற்பனை செய்து கொண்டு பதற்றமான சூழலை ஏற்படுத்த வேண்டாம் என்று அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஹீசைன் ஹக்கானியிடம் அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

தவறான கணிப்புக்கள் கூடாது. மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் செயல்களை மேற்கொள்ளக் கூடாது. இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து செயல்பட வேண்டிய தருணம் இது தான் என்பதை இரு நாடுகளும் உணர வேண்டும் என்று ஹக்கானியிடம் வலியுறுத்தியதாக கோர்டன் ஜோன்ட்ரோ தெரிவித்துள்ளார். (ந-5)

## சீனாவில் விபத்து 17 பேர் பலி


(ஹூனான்)

சீனாவில் ஹூனான் மாகாணத்தில் கட்டப்பட்டு வரும் ஒரு கட்டடத்தில் எதிர்பாராத விதமாக லிப்ட் துண்டித்து கீழே விழுந்ததில் 17 பேர் பலியாகினர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை நடந்தது.

விபத்து நடந்தக் கட்டடத்தை ஹூனான் மாகாணத்தைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்று கட்டிவருவதாக அந்நாட்டின் அரச செய்தி நிறுவனமான ஜின்குவா தெரிவித்துள்ளது. (5)

# மனைவியின் விவாகரத்தால் ஆத்திரம் கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்து ஆறு பேரை சுட்டவர் தற்கொலை

(லொஸ் ஏஞ்ஜல்ஸ்)



கிறிஸ்மஸ் தினத்தன்று, முன்னாள் மனை வியின் வீட்டில் புகுந்து, சரமாரியாக ஆறு பேரைச்சுட்டுக் கொன்று, தானும் தற்கொலை செய்து கொண்டார் அமெரிக்க வீரர் ஒருவர். கலிபோர்னியாவில் கோவினா என்ற இடத் தில் ப்ரூஸ் ஜெப்ரீ பார்டோ (45) என்பவர் வசித் தார். இவருக்கும், இவரது மனைவிக்கும் இடையே தகராறு ஏற்பட்டு விவாகரத்து பெற்றனர்.

கிறிஸ்மஸ் தினத்தன்று, கிறிஸ்மஸ் தாத் தா போன்று உடையணிந்து இரண்டு கைகளி லும் துப்பாக்கிகளை ஏந்தியபடி முன்னாள் மனைவி வீட்டிற்கு பார்டோ சென்றார். அங்கு கதவைத் திறந்து சிறுமியின் முகத்திலும் இன்னொரு சிறுமியின் பின்பு றத்திலும் சுட்டு விட்டு வேகமாக உள்ளே சென்று அங்கிருந்த உறவினர்களையும் சரமாரியாகச் சுட்டார்.

இவர் சுட்டதில் வீட்டில் சில இடங்களில் தீப் பிடித்தது. விவரம் அறிந்து கோவினா பொலிஸார் செல்வதற்குள் வீடு முற்றிலும் எரிந்து விட்டது. வீட்டினுள் ஆறு சடலங்கள் அடை யா ளம் தெரியாத வகையில் கருகிக் கிடந்தன.

துப் பாக்கிச் சூடு நடத்திய பார்டோ, சைல் மர் என்ற இடத்தில் உள்ள உறவினர் வீட்டுக் குச் சென்று தானும் தற்கொலை செய்து கொண்டார். (5)



ஹவாய் தீவில் தனது குழந்தையுடன், கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட, அமெரிக்க அதிபராகதேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒபாமா.

# நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் இயேசுவின் சுவிஷேச அக்கினி சபை

அன்பான தேவ ஜனங்களுக்கு சர்வ லோகத்தின் பாவங்களைப் போக்க மனித அவதாரமாக வந்த இயேசுவின் கிருபாதார விலை ஏறப்பெற்ற இயேசுவின் நாமத்தில் சகல ஆவிக்குமுரிய திருச்சபை ஊழியர்கள், விசுவாசிகள் எல்லா மக்களுக்கும் எங்கள் அன்பான நத்தார் புது வருட வாழ்த்துக்கள். மரண பரியந்தம் இயேசு எங்கள் கரம் பிடித்து நித்தியத்துக்கு நேராக சகலசத்தியத்திற்குள்ளும் நம் எல்லோரையும் வழி நடத்துவாராக (ஆமேன்)

மேலும்இயேசுவின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசன எச்சரிப் பின் செய்தி 1 இராஜாக்கள் 18ஆம் அதிகாரம் 21ஆம் வசனததின் படி நாம் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்போம் வேதவாக்கியம் யாவும் தேவாவியானவரால் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனிதன் தேறும் படியாக சரியானதையே தெரிந்து அதிலே நடக்கும் படியாக வெளிப்படுத்தல் 1ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்தின்படி தேவ மனிதனாகிய யோவான் தான் கண்டதையும், கேட்டதையும் இங்கு சாட்சியாக அறிவிக்கிறான். வாசிக்கிறவன், கேட்கிறவன், கைக்கொள்கிறவன் பாக்கியவான். காலம் சமீபமாயிருக்கிறது. அருமையான தேவஜனமே கடைசிக் காலத்தில் நாம் நிற்கிறோம். இதோ சீக்கிரமாக இயேசு ராஜா வரப் போகிறார். அதற்கு உரிய அடையாளங்கள் நம் தேசத்தில் நடை பெற்றக் கொண்டிருப்பதை நாம் நன்றாகப் பாக்கின்றோம், அறிகிறோம். இவை யாவும் எல்லோருக்கும் தெரிந்ததே. இவைகளை நாம் அறிய முடியாதபடி எமது மனக் கண்கள் குருடாக்கப்பட்டிருக்கிறது. 2 கொரி 4ஆம் அதிகாரம் 4ஆம் வசனத்தின் படி நாம் எல்லோரும வழி தெரியாமல் தடுமாறுகின்றோம். வழி தவறிப் போகிற எமக்கு நல்வழி காட்ட வந்த நல்லமேய்ப்பன் நம் எல்லோரையும் அன்போடு தம் மண்டை அழைக்கின்றார். வருவாயா (மகனே, மகளே) நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். மத்தேயு 11.28இன்படி கடந்த10.12.2008 வலம்புரிப் பத்திரிகையில் முன்பக்கம் கொடுக்கப்பட்ட ஒரு செய்தியின் தலையங்கத்தை உங்கள் மத்தியில் தெரியப்படுத்துகிறோம். (2011-2012) இல் உலகப்போர் 500 ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும் நாட்கள் நெருங்கி விட்டது. நாட்கள் பொல்லதவையானதால் காலத்தைப் பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள். எபேசியர் (5.16ன் படி) வேதம் சொல்கிறது இதற்கு முக்கிய காரணம் (பாவம்) பாவத்துக்கு சம்பளம் மரணம். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். நம்மிடத்தில் பாவம் இல்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறோம். எல்லோரும் பாவஞ் செய்து தேவனுடைய மகிமையை இழந்தோம். பாவம் செய்யாதவன் ஒருவனும் இல்லையே ஆதலால் நம் பாவங்களை மன்னிக்கக்கூடிய ஒரே தேவன் இயேசுதான். அவருடைய இரத்தம் நம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் பாவ மன்னிப்பைப்பெற்று இறைமகன் இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பாவங்களை அறிக்கை செய்து விட்டு விட்டு தேவ இரக்கத்தைப்பெற்றுக்கொள்ளும் போது வர இருக்கிற அழிவில் இருந்து மரணத்தில் இருந்து தேவன் நம் எல்லோரையும் கோழி தன் குஞ்சுகளை காப்பது போல நம் எல்லோரையும் காப்பார். உக்கிரத்தின் நாளில் நம்முடைய பொன், வெள்ளி, படிப்பு, பட்டம், அந்தஸ்து, கௌரவம் ஒன்றும் நம்மை விடுதலையாக்காது. ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன் என்றார் யோவான். 8.32இன் படி சத்தியத்தையும் அறியுங்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். சத்தியமாவது இயேசு ஒரே வழி, இயேசுதான் சமாதானப் பிரபு அவரால் அன்றி சமாதானத்திற்கு வேறு வழியில்லை. அவரை அண்டி வாழ்ந்து தேவாசீர்வாதத்தை பெற்றுக் கொள் வோம். 2009 ஆம் ஆண்டு சமாதான ஆண்டாய் இருக்க இறைமகன் இயேசு அனுக்கிரகம் செய்வாராக ஆமேன்.

இயேசுவின் சுவிஷேச அக்கினி சபை,
கொக்குவில்

(2035)

# சதாம் உசேன் மாளிகை ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கப்படும் - அமெரிக்கா அறிவிப்பு

(பாக்தாத்)

ஈராக் நாட்டின் முன்னாள் சர்வாதிகாரி சதாம் உசேன் வசித்த அரண்மனையை தன் வசம் வைத்து இருக்கும் அமெரிக்கா அதை எதிர் வரும் 31ஆம் திகதி ஈராக் அரசிடம் ஒப் படைக்க இருக்கிறது.

2003 ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா தாக்குதலை தொடங்கியபோது, சதாம் உசேன் ஆட்சியை விட்டும், அரண்மனையை விட்டும் ஓடித் தலை மறைவானார்.

அப்போது அவர் வசித்த அரண்மனையை அமெரிக்கா கைப்பற்றியது. அன்றிலிருந்து அமெரிக்கா இராணுவத்தின் தலைமையகமாக அது இருந்தது. 2004 ஆம் ஆண்டு அமெரிக்க தூதரகம் அந்த அரண்மனையில் இருந்து செயல் படத் தொடங்கியது.

இப்போது தனியாக அமெரிக்க தூதரகம் கட்டப்பட்டு உள்ளது. இதனால் அந்த அரண்மனையை காலி செய்ய இருக்கிறது. எதிர் வரும் 31 ஆம் திகதி அந்த அரண்மனை ஈராக்கிய அரசிடம் ஒப்படைக்கப்பட இருக்கிறது. அதன் பிறகு பின்னர் ஈராக் ஜனாதிபதி ஜலால் தலாபாணி இந்த அரண்மனையில் குடி யேறுகிறார். (5)

# நான்காம் ஈழப்போரின்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கியும் மாங்குளத்தில் இருந்து வடக்கு நோக்கியும் கிளிநொச்சி நகரை இலக்கு வைத்து முன்னேறத் தொடங்கியதன் மூலம் இதனை உறுதி செய்யக்கூடியதாக இருக்கின்றது.

விடுதலைப்புலிகள் பலவீனமடைந்துவிட்டார்கள் என்று பொய்ப்பிரசார மாயைக்குள் அநேகமாக அனைவரும் ஆழ்ந்திருந்த வேளையில் தான் கிளிநொச்சி நகரை இலகுவில் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்ற பெரும் உறுதியோடு விடுதலைப் புலிகள் தொடுத்த எதிர்த் தாக்குதல்கள் வெளிப்பட்டிருக்கின்றன.

ஆளணி, அபரிமிதமான ஆயுதத்தளபாட வசதிகளோடும் வான் வழி தாக்குதல் உதவியோடு முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து கடந்த 2 வாரங்களுக்கு மேலாக விடுதலைப்புலிகள் தமது மரபு வழி எதிர்ச் சமரை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இதன் மூலம் விடுதலைப்புலிகளின் உண்மையான முகத்தின் ஒரு பகுதி சர்வதேசத்திற்கு இப்போது காட்சி தரத் தொடங்கியிருக்கின்றது.

அவர்களின் ஆற்றல் மிக்க இந்த மரபு வழி எதிர்ச்சமரானது இராணுவத்தினரை இப்போது பல இடங்களில் நிலை குலைய செய்துள்ளது.

அதற்கு கடும் மழையுடன் கூடிய கலாநிலையும் சதுப்பு நிலப்பாங்கான போர்க்களமும் தீர்க்கமான திட்டத்தோடு அமைக்கப்பட்ட எல் வடிவிலான அவர்களின் நீண்ட தடுப்பு மண் அரணும் அதோடு இணைந்து செல்கின்ற அகழியை ஒத்த நீண்ட அமைப்பும் இராணுவத்திற்கு பாதகமாக அமைந்திருக்கின்றது.

எனவே, நான்காவது ஈழப்போரின் உக்கிரமான கட்டம் தற்போது வன்னிக்களமுனைகளில் முகிழ் விட்டு இருக்கின்றது என்று துணிந்து கூறலாம்.

இந்த உக்கிர சண்டை நிலையானது நாட்டில் மோசமான பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளை தீவிரமாக்கப்போகின்றது என்பதில் ஐயமில்லை.

# இலங்கையில் தமிழர் 24

## மக்கள் வருகை

### இடைக்கற்காலம்

பழைய கற்காலம் முடிவடைய இடைக்கற்காலம் தொடங்கியது. இடைக்கற்காலம் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்தது. இந்த நீண்டகாலப் பகுதியின் பெரும்பாகத்தில் இலங்கையும் தென்னிந்தியாவும் தொடர்ந்து இணைந்த நிலப் பகுதியாக இருந்தமையால், இடைக் கற்காலப் பண்பாடு இன்றைய இலங்கை மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களுக்குப் பொதுவான பண்பாடாக இருந்தது என்பது ஐயமில்லை.

இந்நிலப்பகுதியின் பண்பாடும் மக்களும் பொது மூலக்கூறுகளைக் கொண்டு உருவாகிய வரலாற்றை இடைக்கற் காலத் திலேதான் முன்னைவிடத் தெளிவாகக் காண முடிகின்றது.

ஸிரான் தரணியகல நடத்திய ஆய்வுகளின் விளைவாக இன்று இலங்கையில் இடைக்கற்கால நிலைப்பற்றித் தெளிவாகக் அறியமுடிந்துள்ளது. இதுவரை 75க்கு மேற்பட்ட இடைக்கற்காலத் தலங்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை நாட்டின் பல பாகங்களில் பரவிக் காணப்படுகின்றன.

இதனால், இடைக்கற்கால மக்கள் இலங்கையின் பெரும்பாகத்தில் நாடோடிகளாய் வாழ்ந்தனர் என்று கூறலாம்.

இலங்கையில் வாழ்ந்த இடைக்கற்கால மக்களுடைய பண்பாட்டை பொதுவாகப் பலங்கொடப் பண்பாடு என்று ஆய்வாளர் குறிப்பிடுவர். இவ்வாறு இலங்கைக்குரிய பெயர் ஒன்று இப்பண்பாட்டுக்குக் கொடுக்கப்பட்டாலும், இது தென்னிந்தியாவின் தூர தென்பாகத்துக்கும் பொதுவான பண்பாடு என்பதை மறுக்கமுடியாது.

இடைக்கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவிகள் குறுங்கற் கருவிகள். இலங்கையில் கிடைத்த குறுங்கற் கருவிகளின் சில சிறப்பியல்புகள் தமிழ் நாட்டில் திருநெல்வேலிக் கரையிலும் தென் தமிழ் நாட்டின் வேறு இடங்களிலும் கர்நாடகத்திலும் கிடைத்த குறுங்கற் கருவிகளிலும் காணப்படுகின்றன.

இத்தகைய சான்றின் அடிப்படையில் நாம் கூறக் கூடியது என்னவெனில், இடைக்கற்காலத்தில் இலங்கை நிலப்பகுதியும் தென் தமிழ்நாட்டு நிலப்பகுதியும் ஒரு பொது நிலப் பகுதியாக இடைக்கற்கால மக்களுடைய நடமாட்டத்துக்கும் பண்பாட்டுப் பரம்பலுக்கும் வசதியளித்தன என்பதே.

அடுத்து வரும் காலப்பகுதியாகிய ஆதி இரும்புக் காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான முன்னேற்றங்களுக்கு இடைக்கற் காலத்தில் வித்திடப்பட்டது. புதிய பண்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு இக் காலத்தில் தென்னிந்தியா இலங்கைப் பிராந்தியம் தயாராகியது எனலாம்.

இடைக்கற்காலம் முடிவடைய, இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டின் கூறுகள் இலங்கைக்குப் பரப்பப்பட்டன. அத்துடன், தூரவர்த்தகத் தொடர்புகள் புதிய பண்பாட்டுச் செல்வாக்கினையும் கொண்டு வந்தன. இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கரையிலும் இலங்கையின் வடமேற்குக் கரையிலும் இடைக்கற்கால மக்கள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்று உண்டு.

இம்மக்கள் பொதுப் பண்புகளைக் கொண்ட கற்கருவிகளைப் பயன்படுத்தினர். இரு கரைகளுக்குமிடையில் இருந்த கடலில் சங்கும் பிற கடற்பொருட்களும் முத்தும் பெறுவதற்கு இவர்கள் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதனால் அடுத்து வரும் ஆதி இரும்புக் காலத்தில் முக்கியத்துவம் பெறும் தொழில்களாகிய முத்துக்குளிப்பு, சங்குக்குளிப்பு ஆகியவற்றுக்கு இம்மக்கள் தயாராய் இருந்தனர். இவர்கள் புதியகற்காலப் பண்பாட்டு நிலைக்கோ Chalcolithic காலப் பண்பாட்டு நிலைக்கோ மாறுமுன் ஆதி இரும்புக்காலப் பண்பாட்டின் செல்வாக்கினைப் பெற்றனர். இதனால், கேரளம் மற்றும் தென் தமிழ்நாடு, இலங்கை ஆகிய இடங்களில் புதிய கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் இது வரை கிடைக்கவில்லை.

### இலங்கையின் இடைக்கற்கால மக்கள்


இடைக்கற்கால மக்கள் இலங்கையின் பெரும்பாகத்தில் பரவி வாழ்ந்தனர் எனினும், வடக்கில் யாழ்ப்பாணத் தீபகற்பமும் வட கிழக்கில் மகாவலி நதியின் தாழ்வடிநிலப் பகுதியும் இம் மக்கள் செல்லாத இடங்களாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இடைக்கற்காலக் கருவிகளாகிய குறுங்கற்கருவிகளை ஆக்குவதற்கு உகந்த கற்கள் இல்லாமையும் தரைமட்டத்தில் இலகுவில் பெறக்கூடிய நன்னீர் இல்லாமையும் (அதாவது, ஆறுகள் இல்லாமை) இம் மக்கள் அங்கு சென்று வாழ்வதற்குச் சாத்தியமான நிலையை உருவாக்கவில்லை எனத் தோன்றுகின்றது.

இடைக்கற்காலம் முடிவடையும் கட்டத்தில், அதாவது இற்றைக்கு 3000 அண்டுகளுக்கு முன், இலங்கையில் வாழ்ந்த இம் மக்கள் யார்? தாம் வாழ்ந்த இடங்களில் இவர்கள் விட்டுச் சென்ற கற்கருவிகள், மற்றும் உணவு எச்சங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து அவர்கள் வாழ்க்கை பற்றி ஓரளவு அறியலாம்.


பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

இவர்களுடைய எலும்புக் கூறுகளைக் கொண்டு ஓரளவு இவர்கள் உடலியல்புகள் பற்றி அறியலாம். ஆனால் எழுத்துச் சான்றுகள் எதுவும் இல்லாது இவர்கள் பேசிய மொழிகள் பற்றியோ, வேறு பண்பாட்டு இயல்புகளையோ அறியமுடியாது.

(தொடரும்)



அண்மையில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் நடைபெற்ற தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 156 ஆவது ஜென்ம தின விழாவில் சுவாமி சித்ரூபானந்தா கரவெட்டி வைத்தியசாலை மாவட்ட அதிகாரி டாக்டர் மு.யோகீஸ்வரதேவரிடம் ரூபா 10 ஆயிரம் பெறுமதியான மருந்துப் பொருட்களை கையளிப்பதையும், விதவைகளுக்கு புதிய சேலைகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



அண்மையில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழாவில் அகில உலக சைவ குருமார் சம்மேளன சிவாச்சார்ய பீடாதிபதியும் வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் மங்கல விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# நீதித்துறை தீர்ப்புகளை அமுலாக்குவது அவசியம்

நாட்டின் பெரும்பான்மையான மக்களது கவனத்தை ஈர்த்துவிட்ட பெற்றோல் விலைக் குறைப்பு தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அமுலாக்கல் சர்ச்சை 2008 லிருந்து 2009ஐயும் தொடும் என்பது சந்தேகத்திற்கிடமின்றி தெரியவந்துவிட்டது. அந்த வகையில் இது 2008 / 2009 காலப் பகுதியின் சிறந்த திரைப்படமொன்றுக்கான அற்புதக் கதையம்சமாக வர்ணிக்கப்படுகிறது.

குறித்த இக் கதையம்சம் நீதிமன்ற விடுமுறை, விலையை குறைக்க வேண்டும் என்ற தீர்ப்பில் கூறப்பட்டுள்ள ஆட்சேபனையை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம், ஆர்ப்பாட்டங்கள், வரிசைகள் அரசுக்கான வரி வருமானத்தை தடுப்பதற்கான முயற்சி, நாட்டுப்பற்றின்மை, பிரபல்யம் பெறும் தந்திரம், ஒரு சாராரின் விலைக் குறைப்பும் அதிகரிப்பும், காலத்தை இழுத்தடித்தல், அரசியல்வாதிகளின் கருத்துக்கள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் விரிவாக்கம் பெற்றுச் செல்கின்றது.

பாராளுமன்ற அமர்வு, அரசாங்கத்தின் இறுதித் தீர்மானம் விடுகைக்குப் பின்னரான நீதிமன்ற அமர்வுகள் யாவுமே அடுத்த ஆண்டைத் தான் தொடுகின்றன. எனவே 2008 இன் பிணக்குக்கான தீர்வைத் தேடி 2009 ஆம் ஆண்டை காத்திருக்கும் படி மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் குறித்த உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கும் நெருக்கடிக்கும் தனியொருவரைத் தவிர பலர் பொறுப்பாளிகள் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. இவ்வாறு திடீர் திடீர் தீர்ப்புக்கள் காரணமாக அரசாங்கத்தின் பிரபல்யம் குறைந்து வருவதாகவும், நீதித்துறையின் செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் பேசப்படுகின்றது. இவ்வாறு பேசப்பட்டாலும் அரசாங்கத்தின் இருப்புக்கு நேரடியானதும், உடனடியானதுமான தாக்கத்தை உண்டுபண்ணாது என்பது ஏற்கத்தக்கதே.

இதேநேரம் சம்பந்தப்பட்டவர்களை தண்டனைக்குட்படுத்தியதும், விலை நிர்ணயமும் பிரபல்யத்தை ஏற்படுத்தியது உண்மையானாலும் நீதித்துறை நிறைவேற்றுத் துறையின் பிரதேசத்தை அத்துமீறி பிரவேசித்ததாக நோக்கர்கள் சிலர் கூறுவதால் இந்நிலைமை நிறைவேற்றுத் துறையின் புலன்களை சூடேற்றியுள்ளதாக பெரும்பான்மையானோர் அவதானிக்கின்றனர்.

### சமனிலை தலையீடுகளின் முக்கியத்துவம்

எமது அரசியல் அமைப்புச் சட்டமானது நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளுக்குமிடையே வலு வேறாக்கலைக் கொண்டமைந்த முக்காலியில் அமர்ந்துள்ளது.

இம் மூன்று நிலைகளுக்குமிடையே ஒன்றின் அதிகாரத்தை இன்னொன்று மீறாத வகையில் சமனிலைத் தலையீடுகள் இருத்தல் வேண்டும். ஆனால் அதிகார நடவடிக்கைகளை மேற்கொள்கையில் குறித்த மூன்று துறைகளுமே தாமும் சட்டத்திற்கு கீழ்ப்பட்டவர்களே என்று நினைவூட்டிக் கொள்ள தவறத் தேவையில்லை.

சட்டத்தைப் பொருள்கோடல் செய்யும் நீதித் துறையும் சட்டத்திற்கு மேலானதல்ல. சட்டவாக்கத்துறை சட்டங்களை நிறைவேற்றி, தேசத்தின் நீதிக்கும் பொறுப்பாகவுள்ளது.

நிறைவேற்றுத் துறையானது ஆக்கப்பட்ட சட்டங்களை அமுலாக்கி அதற்களிக்கப்பட்ட கடமைகளை சிறந்ததொரு முறையில் நிறை வேற்றப்படவேண்டும். அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை விட வும் மேலாக எந்த அதிகாரமும் மீறிச் செல்ல முடியாது. அத்தகைய ஒரு நிலையே குறித்த பிரிவிற்குள் சர்வாதிகார நிலையைத் தோற்றுவிக்கும்.

அவ்வாறான நிலையில் சமநிலை தலையீட்டுக்கு வேலை ஏற்படும். அப்போது மற்றைய இரண்டு துறைகளும் மீறிச் செல்ல முற்படுகின்ற துறையின் சர்வாதிகாரத்துக் கான நிதானமான சலனத்தை தோற்கடிக்க முற்பட வேண்டும்.

அதுவே ஜனநாயகத்தின் பெறுமானமும் தரமுமாகும்.

நிறைவேற்றுத் துறையானது நீதித்துறை நீதியற்ற முறையில் நிறைவேற்றுத்துறையையும், சட்டவாக்கத் துறையையும் ஆக்கிரமிக்கவில்லையெனில் நீதித்துறையின் தீர்மானங்களை அமுலாக்க வேண்டும்.

### சட்ட ஆட்சியின் முக்கியத்துவம்

ஜனாதிபதியும், பாராளுமன்றமும், மக்களால் தெரிவுசெய்யப்படுகின்ற அமைப்புக்களாகும். இவ்வமைப்புக்கள் மக்களின் வாக்குரிமை,அரசியல் எதிர்ப்பு, ஊடகம், பொது மக்கள் கருத்து போன்றவற்றினால் ஆட்டங்காணத்தக்கது. தேர்தலொன்றில் கவிழ்ப்பை சந்திக்கத்தக்கது.

**இஸ்மாயில் பி. மஆரிஃப்**
(தலைவர், சுயாதீன தேசிய முன்னணி)

ஆனால், உயர்நீதிமன்றம் கடைசி நீதி, ஞானோபதேசம் போன்றவற்றைக் கொண்டுள்ள அதிகாரம் பெற்ற காவலனாக உள்ளது. ஆனாலும் அடிப்படை உரிமைகள் எல்லைகளற்ற முறையில் நீதியாகிவிடுமானால் ஆரோக்கியமின்றிய தோற்றத்தையளிக்கக் கூடியதாக நீதிக்குள் அநீதி என்ற வெளிப்பாடு ஏற்படலாம். (தொடரும்)

# 2009 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

## மேடம்

**இனி பன்னிரண்டு ராசிகளுக்கும் உரிய விரவான ஆங்கிலப் புத்தாண்டுப்பலன்களை தினமும் ஒவ்வொன்றாக காண்போம்.**

வரும் ஆங்கிலப் புத்தாண்டான 2009ஆம் ஆண்டில் உங்களின் சுய முயற்சியால் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். உங்களின் சகோதர –சகோதரிகளுக்கு குறிப்பாக இளைய சகோதர –சகோதரிகளுக்கு உங்களால் இயன்ற அளவு ஆதரவு தருவீர்கள். இதனால் குடும்பத்தில் இணக்கமும் பாசமும் ஏற்படும். உங்களின் செயல்களில் பதற்றம் குறைந்து விவேகம் அதிகரிக்கும். சுய தொழிலில் இருப்பவர்கள் தைரியமாகப் புதிய முயற்சிகளில் ஈடுபடுவார்கள். நண்பர்கள் உங்கள் தேவைக்கேற்ப உதவிகளைச் செய்வார்கள். மேலும் உங்களுக்குத்தேவையான தைரியமும் உங்களிடமிருந்தே கிடைக்கும்.

குரு பகவானின் கருணையினால் உங்களுக்கு ஏற்பட்ட உடல் உபாதைகள் மறைந்து விடும். பேச்சில் தெளிவு பிறக்கும். சிந்தித்து பொருள்பட பேசும் ஆற்றல் உண்டாகும். தனச் சேர்க்கைக்கு வழி பிறக்கும். கவர்ச்சிகரமான தோற்றப் பொலிவு உண்டாகும். மே மாத்திலிருந்து ஜுலை மாதம் வரை சனி பகவானை இலாபஸ்தானத்திலிருந்து குரு பகவான் பார்வை செய்வதால், பெரியோர்களின் ஆசிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

எத்தகைய கடினமான சூழ்நிலைகளில் இருந்தாலும், கடைசி நேரத்தில் இறையருளால் மீண்டுவிடுவீர்கள். பொதுச் சேவையில் நாட்டம் அதிகரிக்கும்; அதில் உரிய பாராட்டுக்களையும் பெறுவீர்கள். புதியதுறைகளில் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் அனுபவ அறிவைப் பயன்படுத்தி காரியங்களை நிறைவேற்றுவீர்கள். உங்களின் கீழ் பணிபுரிபவர்கள் உங்களிடம் நன்றியுடன் இருப்பார்கள்.

பூமியிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு தொழில் நடத்துபவர்கள் சிறப்பான இலாபங்களைப் பெறுவார்கள்.

அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து வாழ்க்கைத் தரம் உயரும்.

செப்ரெம்பர் மாதத்திலிருந்து சனி பகவான் உங்களின் ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் வீண் அபவாதங்கள் சூரியனைக் கண்ட பனிபோல விலகும். மற்றவர்கள் உங்களின் பேச்சுக்குக் கட்டுப்படுவார்கள். வீடு மாற்றம் செய்ய நினைப்பவர்கள் அதனை இப்போது செய்யலாம். வழக்கு விவகாரங்களில் ஏற்பட்ட வில்லங்கம் மறையும்; வழக்குகள் நீதிமன்றிற்கு வெளியே சமரசமாகத் தீர்ந்து விடும்.

இந்த ஆண்டு மே மாத்திலிருந்து ஆண்டு இறுதிவரை, ஆகஸ்ட் மாதத்தைத் தவிர்த்து சனி பகவானுக்கு குரு பகவனின் அருட்பார்வை கிடைப்பதால் உங்களின் தனித்தன்மை வெளிப்படும் தவறுகள் செய் யாமல் நேர் வழியில் நடக்கும் எண்ணம் மேலோங்கும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் உங்களின் வேலைகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். இயந்திர வாழ்க்கையிலிருந்து விடுபட்டு புதிய சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கெடுக்க நினைப்பீர்கள்.

சக ஊழியர்களில் உங்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பவர்களைக் கண்டறிந்து விலக்கிவிடுவீர்கள். வருமானம் அமோகமாக இருக்கும். ஆனாலும் இக்காலகட்டத்தில் பதவி உயர்வுக்கு வழி இருக்காது. அதே நேரம் மேலதிகாரிகள் உங்களிடம் அனுசரணையாகவே இருப்பார்கள். வேலை விடயத்தில் உங்களின் ஓரிரு கோரிக்கைகள் மே மாதத்திற்குப் பின்னர் நிறைவேறும்.

வியாபாரிகள் மனத் திருப்தியுடன் வியாபாரத்தை நடத்துவார்கள். மறைமுக எதிரிகளின் தொல்லைகள் குறையும் வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும் அவர்களின் தேவைகளையும் எப்பாடுபட்டாவது பூர்த்தி செய்து விடுவீர்கள் வியாபாரத்தை தனித் தன்மையுடன் நேர்த்தியாகச் செய்வீர்கள். அதே நேரம் இலாபங்களைப் பிரித்துகொள்ளும் சத விகிதத்தில் கூட்டாளிகள் உங்களுடன் சிறிது மாறுபட நேரிடலாம். ஆனாலும் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக்கொண்டு அவர்க்ளை ஒத்துப்போக வைப்பீர்கள். சிறிய அளவில் முதலீடுகளைச் செய்து, வியாபாரத்தைப் பெருக்குவீர்கள்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி நன்றாகவே இருக்கும். பழைய குத்தகைப் பாக்கிகளை உபரி வருமானத்தால் திருப்பிச் செலுத்துவீர்கள் பூச்சிக்கொல்லி மருந்துக்கு செலவு செய்வீர்கள். பாசன வசதிகளில் கவனம் செலுத்துவீர்கள். அதேசமயம் கால்நடைகளுக்கு நீங்கள் பராமரிப்புச் செலவுகள் செய்ய நேரிடும். மேலும், சக விவசாயிகளுடன் வீண் வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும்.

இந்த ராசி அரசியல்வாதிகளுக்கு நேரடியாகத் தொல்லை கொடுத்தவர்கள் சற்று அடங்கி நடப்பார்கள். எனினும் அவர்களிடமிருந்து சற்று விலகியே இருக்கவும். மற்றபடி கட்சியில் உங்களின் திறமைக்கேற்ற புதிய பொறுப்புகள் கிடைக்கும். காலத்திற்கேற்றவாறு தற்கால நிலைமைகளைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ள முற்படுவீர்கள்.

கிரகங்கள் தாங்கள் இருக்கும் ராசியிலிருந்து அடுத்த ராசிக்கு மாறுமுன் அடுத்த ராசியின் பலாபலன்களை ஜாதகருக்குக் கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். அதாவது,

| | |
|---|---|
| சூரிய பகவான் | 5 நாட்கள் முன்னதாகவே |
| புத, சுக்கிர பகவான்கள் | 7 நாட்கள் முன்னதாகவே |
| செவ்வாய் பகவான் | 8 நாட்கள் முன்னதாகவே |
| குரு பகவான் | 2 மாதங்கள் முன்னதாகவே |
| ராகு, கேது பகவான்கள் | 3 மாதங்கள் முன்னதாகவே |
| சனி பகவான் | 6 மாதங்கள் முன்னதாகவே |

பலன்களைத் தருவர்.

**ஒவ்வொரு ராசியிலும் கிரகங்கள் சஞ்சரிக்கும் கால அளவுகள்**

| | |
|---|---|
| சூரிய பகவான் | 1 மாதம் |
| சந்திர பகவான் | 2 நாட்கள் |
| செவ்வாய் பகவன் | 1 மாதம் |
| புத பகவான் | 1 மாதம் |
| குரு பகவான் | 1 வருடம் |
| சுக்கிர பகவான் | 1 மாதம் |
| சனி பகவான் | 2 வருடங்கள் |
| ராகு பகவான் | 1 வருடம் |
| கேது பகவான் | 1 வருடம் |

கலைத்துறையினரைப் பொறுத்தவரை தொழில் வகையில் போட்டி– பொறாமைகளைச் சந்தித்து வந்தாலும், உங்களின் முயற்சிகள் சீரிய முறையில் வெற்றிபெறும். புதிய நண்பர்களின் உதவியுடன் துறையில் புதிய நுணுக்கங்களை அறிந்து கொள்வீர்கள். அவர்களுடனான கூட்டு முயற்சியால், சில வெற்றிகளையும் அடைவீர்கள். சிலருக்கு நூதன வாகனச் சேர்க்கையும் உண்டாகும்.

பெண்மணிகளுக்கு கணவரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். பணவரவு சீராக இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறக்கும். ஆன்மீகச் சுற்றுலா சென்று வருவீர்கள். உங்களால் குடும்பம் முன்னேற்றமடையும். அதே நேரம் பேசும் நேரத்தில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவும்.

மாணவமணிகள் முழு ஆண்டுத் தேர்வில் நல்ல பெறுபேறுகளை பெறுவீர்கள். புத்திர ஸ்தானத்தைப் பார்வையிடும் குரு பகவான் உங்களின் அறிவாற்றலைப் பெருக்கி, சீரிய முறையில் உழைத்துப் படிக்கச் செய்வார். அதிஷ்ட வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். விரும்பிய பாடப் பிரிவுகளில் சேர்வீர்கள். அறிவில் தெளிவும், கூர்மையும் உண்டாகும். அதேநேரம் உருப்படாத நண்பர்களின் தொடர்புகளை விட்டொழிக்கவும். குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே விளையாடவும். இதன் மூலம் புதிய ஆண்டில் மாணவர் திலகமாக நீங்கள் விளங்க முடியும்.

### பரிகாரம்

முருகப் பெருமானை வழிபட்டு வரவும். முடிந்தால் தண்டாயுதபாணியை தரிசிக்கவும் இதனால் சுகங்கள் கூடும்.

### பஞ்சாட்சரமும், அஷ்டாக்ஷரமும்

தினமும் காலையில் தூங்கி எழுந்தவுடன் கை, கால் அலம்பி பல் துலக்கிவிட்டு, விபூதியை (தண்ணீரில் குழைக்காமல்) நெற்றியில் பூசிக்கொள்ள வேண்டும். இச்சமயத்தில் மேலே பார்த்துக் கொண்டு நமசிவாய என்கிற பஞ்சாட்சரத்தை (ஐந்தெழுத்தை) ஜபித்துக் கொண்டே, விபூதி தரையில் விழுந்து விடாமல் நம் உடம்பின் மீதே விழும்படி நெற்றியில் தரித்துக்கொள்ள வேண்டும். குளித்து முடித்த பின்பே தண்ணீரில் குழைத்து இட்டுக் கொள்ள வேண்டும். அச்சமயத்திலும் பஞ்சாட்சரத்தை ஜபிக்க வேண்டும்.

**சிவாயநம** என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை. பஞ்சாட்சரத்திற்கு மேம்பட்ட மந்திரம் இல்லை. பரமேஸ்வரனுக்கு மேம்பட்ட தெய்வம் இல்லை என்பது முதுமொழி. எனவே எப்பொழுதும் சிவாயநம என்று மனதில் தியானித்து பிறவிப் பயனை அடைவோமாக!

ஜோதிடர் கே.சி.எஸ். ஐயர்

*(வளரும்)*

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை விமர்சிக்கும் அரசாங்கம் பிரதம நீதியரசரையும் சதிகாரர் என முத்திரை குத்துகிறதா?

## ஐ.தே.க.கேள்வி; பாராளுமன்ற அதிகாரத்தை ஜனாதிபதி பறிப்பதாகவும் விசனம்

(கொழும்பு)

பெற்றோலின் விலையை குறைத்து மக்களுக்கு சலுகை வழங்கிய உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை சர்வதேச சதித்திட்டம் என விமர்சிக்கும் அரசாங்கம், அத் தீர்ப்பினை வழங்கிய பிரதம நீதியரசரையும் சதிகாரர் என முத்திரை குத்துகின்றதா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஐயசேகர கேள்வி எழுப்பினர்.

பாராளுமன்றத்துக்குள்ள நிதி நிர்வாக அதிகாரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறிது சிறிதாக தன்வசம் பலாத்காரமாக எடுத்த வருகின்றார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பு, கேம்பிரிஜ் றெரஸிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நிறைவேற்று அதிகாரம், அரசியலமைப்பு அதிகாரம் மற்றும் நீதித்துறை இம் மூன்றிற்கும் இடையே சுமுகமான உறவுகள் இருக்க வேண்டும். அதன் போதே நாட்டில் நல்லா ட்சி நடக்கும்.

ஆனால் இன்று எமது நாட்டில் இது மூன்றிற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளதோடு அரசியல் நெருக்கடி தலை தூக்கியுள்ளது.

பாராளுமன்றத்திற்குள்ள நிதி நிர்வாக அதிகாரத்தை ஜனாதிபதி மஹிந்து ராஜபக்ஷ சிறிது சிறிதாக தன்வசம் பலாத்காரமாக எடுத்துக் கொணடுள்ளார்.

பெற்றோல் விலையை குறைக்குமாறு உயர் நீதிமன்றம் மக்களுக்கா வழங்கிய தீர்ப்பை நடை முறைப்படுத்தாத அரசாங்கமும் அதற்கு துணை போகும் விமல் வீரவன்ச எம்.பியும் இது சர்வதேச சதித் திட்டமாகுமென விமர்சிக்கின்றனர்.

அப்படியானால் இத் தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசரும் சதிகாரரா? இச் சதியின் பின்னணியிலுள்ள சர்வதேச நாடுகள் எவை என்பதை அரசாஙகம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

விமல் வீரவன்ச எம்.பி எதற்கெடுத்தாலும் சர்வதேச சதித் திட்டமென புலம்பித் திரிகிறார். அவரது மனநிலை குழம்பிப் போயுள்ளதாக நான் நினைக்கிறேன்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா *நாய்* எனக் கூறினார் என்பதை முன் வைத்து உயர் நீதிமன்றத்தை அவதூறு செய்தார் என குற்றம் சாட்டி இரண்டு வருட காலம் சிறை வாசம் வழங்கப்பட்டது.

அவ்வாறானால் உயர் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத இந்த அரசாங்கம் தொடர்பல் உயர் நீதிமன்றம் நடவடிககை எடுக்க வேண்டும்.

அத்துடன் வெளிநாட்டு முதலீடுகள் குறைந்துள்ளன. பணவீக்கம் அதிகரித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம பாரிய பின்னடைவைக் கண்டுள்ளது.

இதற்குக் காரணம் அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் ஊழல் மோசடிகளாகும் மத்திய வங்கியின் ஆளுநருக்கு பொருளாதார அறிவு கிடையாது அவரது செயற்பாடுகளும் நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கு ஒரு காரணமாகும்.

எனவே மத்திய வங்கி ஆளுநரின் நடவடிக்கைகளை விசாரணை செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்க வேண்டுமென பாரளுமன்றத்தில் கோரிக்கையொன்றை முன்வைக்கவுள்ளோம். இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் கலந்தாலோசிக்கப்படும்.

உயர் நீதிமன்ற தீர்ப்பினை ஆராயவோ இதனை எதிர்க்கவோ அமைச்சரவைக்கு அதிகாரம் இல்லை. எனவே உயர் நீதிமன்றத் தீர்ப்பை ஆராயும் உரிமையும் அமைச்சரவைக்கு கிடையாது என்றார். (ஓ-5)

# நான்காம் ஈழப்போரின் உக்கிர கட்டத்தில் வன்னிக் களமுனைகள்

கிளிநொச்சி நகரை நோக்கி முன்னேறும் இராணுவம் அதனை எட்டிப்பிடிக்கும் அளவுக்கு நெருங்கி விட்டதாகவும் எந்த வேளையிலும்



களமுனையில் படைவீரர்


படையினர் அந்த நகருக்குள் பிரவேசித்து விடுவார்கள் என கடந்த மாதம் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

விடுதலைப்புலிகளின் அரசியல் நிர்வாகத் தலைநகரான கிளிநொச்சியை கைப்பற்றுவதன் மூலம் விடுதலைப்புலிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி விடலாம் என்பது அரசாங்கத்தின் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையைச் செயல் வடிவமாக்குவதற்காக பல முனைகளிலும் இராணுவத்தினர் தமது தாக்குதலைத் தொடுத்த வண்ணம்-பாரிய நகர்வினை கடந்த திங்கட்கிழமை மேற்கொண்டிருந்தார்கள்.

கிளிநொச்சியை நோக்கிய இராணுவத்தின் முன்னேற்ற நடவடிக்கையில் இரண்டாவது பாரிய நகர்வு இதுவாகும்.

கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை இத்தகைய பாரிய பலமுனை நகர்வொன்றினை இராணுவம் மேற்கொண்ட போது விடுதலைப்புலிகள் சற்றும் எதிர் பாராதவாறு விடுதலைப்புலிகள் கடும்



மீண்டும் கைப்பற்றிய இடங்களில் இராணுவத் தளபாடங்களை மீட்கும் புலிகள்

முறியடிப்புத்தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் இத் தாக்குதல்களை "அலை அலையாய் வந்து மோட்டார் பருவ மழை பொழிந்த விடுதலைப்புலிகள்" என தென்னிலங்கை ஆங்கில ஊடகங்கள் வன்னிக்களமுனைப் படை அதிகாரிகளை மேற்கோள்காட்டி வர்ணித்திருந்தனர்.

வன்னிக்களமுனைகளில் உக்கிர மோதல்கள் வெடித்திருந்த நிலையில் யாழ். முன்னரங்குகளான கிளாலி -முகமாலை முனைகளிலும் கடுமையான மோதல்கள் இடம்பெற்றிருந்தன.

கிளாலி ஊடாக முன்னநகர்வை மேற்கொண்ட படையினரை விடுதலைப்புலிகள் ஆக்ரோஷத்துடன் படையினர் நிலைகுலைந்து பாரிய இழப்புக்களுடன் பழைய நிலைக்கு பின்வாங்கினர்.

மாவிலாறு தொடக்கம் கிளிநொச்சி முன் நகர்வு வரை படையினர் பாரிய இழப்புக்களுடன் விடுதலைப்புலிகளின் பல பிரதேசங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்த முன்னேற்றம் ! விடுதலைப்புலிகளின் தந்திரோபாயமான பின் வாங்கலை தொடர்ந்து ஏற்பட்டது என்பது இராணுவ ஆய்வாளர்களின் கணிப்பு.

எனினும் இராணுவமோ விடுதலைப்புலிகள் பலவீனமடைந்து விட்டனர். மரபு வழிச் சண்டை வலிமையை இழந்து விட்டார்கள். ஆட்பற்றாக்குறை, அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆயுதத் தட்டுப்பாடு அவர்களுக்கு இருக்கிறது.பெரும் உயிர் இழப்புக்களை அவர்கள் சந்தித்து வருகிறார்கள்.

அதேவேளை, படையினர் வெற்றி வாகை சூடி ஒன்றன் பின் ஒன்றாக மாங்குளம், முறிகண்டி ,பூநகரி, நெடுங்கேணி, அலம்பில் என்ற பல முக்கியத் தளங்களை விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றி முன்னேறிச்செல்கிறார்கள் என்று அரசாங்கம் பெருமையாக போர்க் கள நிலைமைகள் குறித்து மக்கள் மத்தியிலும் சர்வதேச மட்டத்திலும் பிரசாரங்களை மேற்கொண்டது.

கடந்த திங்கட்கிழமை திருமுருகண்டி எனக் குறிப் பிடப்படும் முறிகண்டி, பரந்தன் பிரதேசத்தின் மேற்குப்பகுதியிலும் பல முனைகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையே கடும் மேதல் இடம் பெற்றதாகவும் இதில் 46 விடுதலைப்புலிகளும் 10 படையினர் கொல்லப்பட்டதாக இராணுவத்தினர் அறிவித்தனர்.

இதேவேளை, இம் மோதல்களில் குறைந்தது 100 படையினர் கொல்லப்பட்டதாகவும் 200 படையினர் காயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். எனினும், தமது தரப்பு இழப்புகள் குறித்து அவர்கள் தகவல் எதுவும் வெளியிடவில்லை.

முறிகண்டி, பரந்தன் பிரதேசங்களில் கிளிநொச்சி நகரை இலக்கு வைத்து இராணுவத்தினர் 5 முனைகளில் முன்னேறியதாகவும் அவர்களை எதிர்த்து விடுதலைப்புலிகள் நடத்திய உக்கிர தாக்குதல்களில் இரண்டு முனைகளில் படையினர் பின் வாங்கி விட்ட தாகவும் அன்று மாலை வரை மூன்று முனை களில் உக்கிர சண்டை நடை பெற்று வருவ தாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித் திருந்தனர்.

நான்காம் ஈழப்போர் என வர்ணிக்கப்படும் தற்போதைய சண்டைகளில் அரச படையினர் புதிய போர்க் கள உத்திகளை பெருமளவில் கையாண்டு வருகிறார்கள்.

குறிப்பாக முன்னைய ஜெயசிக்குறு உட்பட பெரிய எடுப்பில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரச படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளும் சரி, இந்திய அமைதிப்படையினரின் இலங்கையில் நிலை கொண்டிருந்த போது, விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளும் சரி, முக்கியமான ஒரு பெரும் வீதியை புவி மையமாக வைத்து அதன் இரு பக்கங்களிலும் பெரும் ஆளணி ஆயுதத் தளபாடங்களுடன் நகர்ந்து சென்றார்கள்.

விடுதலைப் புலிகள் அவர்களை எதிர்த்து , கரந்தடி தாக்குதலையும் ஆங்காங்கே திடீர் திடீரென பெரும் தாக்குதல்களை மேற்கொண்டு படையினரை திக்கு முக்காட வைத்தார்கள்.



களமுனையில் புலிகள்

அதேவேளை, சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையிலும் தேவைக்கேற்ற முறையிலும் மரபு வழிப் படையெடுப்பு தாக்குதல் களையும் பல முனைகளில் தொடுத்து அரச படையினருக்கு பேரிழப்பை ஏற்படுத்தி அவர்களின் முயற்சிகளை முறியடித்தார்கள்.

ஆனால் அரசாங்கத்தினால் இன்னும் பெயர் சூட்டப்படாத தற்போதைய பாரிய இராணுவ நடவடிக்கையில் படையினர் பெரும் அளவில் கொரில்லாப் பாணியிலான தாக்குதல்களையே மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

சிறு சிறு குழுக்களாகப்பிரிந்து எதிரியின் பிரதேசத்தினுள் பிரவேசித்து தாக்குதலை நடத்துவது இவர்களுக்கு ஆதரவாக பின் தளத்தில் இருந்து எறிகணை மற்றும் டாங்கிகளின் பீரங்கிகளைக்கொண்டு தாக்குதல்களை மேற்கொள்வது , விமானப்படையின் ஆதரவோடு வான் வழித்தாக்குதல்களை நடத்துவது போன்ற வித்தியாசமான



வடபோர்முனையில் புலிகள்

முறையைப் பின்பற்றி வந்துள்ள ார்கள்.

இதனால் , வீதி ஒன்றை முக்கியமாகக் கொண்டு அதன் இரு பக்கங்களிலும் முன்னேறிய பாணி மாற்றப்பட்டு படையினர் காடுகளின் ஊடாக பிரதான வீதிக்கு



கைப்பற்றிய இடங்களில் திட்டமிடும் படையினர்

அப்பால் தமது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

இதனால் விடுதலைப்புலிகள் ஒரு வகையில் மரபு வழி படையெடுப்பிலான எதிர்த்தாக்குதல்களை நடத்த வேண்டியவர்களாகவும் அதேவேளை, தேவைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற வகையில் கொரில்லாப் பாணியிலான தாக்குதல்களையும் நடத்த வேண்டிய தேவைக்குத் தள்ளப்பட்டார்கள்.

**ஜனாகி**

காடு மேடுகளை கடந்து படையினர் முன்னேறினார்கள், இடைக்கிடையே விடுதலைப் புலிகளிடமிருந்து பெரும் முறியடிப்புத் தாக்குதல்களை அவர்கள் சந்திக்க நேர்ந்தது.

இருப்பினும், விடுதலைப் புலிகளின் பின் வாங்கல் தந்திரமானது அவர்கள் போரிடும் வலுவை இழந்து விட்டார்கள் என்ற அரசின் பல முனைப்பிரசாரங்களை இராணுவமும் பெருமளவில் கணக்கில் கொண்டு தமது நகர்வுகளை ஒரு தீவிரமான போக்கினையே அண்மைக் காலமாக காணக்கூடியதாகவுள்ளது.

விடுதலைப்புலிகளிடமிருந்து பூநகரி தளத்தை இராணுவத்தினர் கைப்பற்றியதையடுத்து அவர்கள் மேற்கு

(4ஆம் பக்கம் பார்க்க)



# திண்டுக்கல் சாரதி



நடிப்பு : கருணாஸ், கார்த்திகா, நாசர்
இசை :தினா
இயக்கம் : சிவசண்முகன்
நிர்வாகத் தயாரிப்பு: ஹன்ஸ்ராஜ் சக்ஸேனா
தயாரிப்பு: சன் பிக்சர்ஸ் & ட்ரீம் டவர்ஸ்

திரை விமர்சனம்

## புதிய ஒளி

நல்ல கதையிருந்தால் போதும். யாரும் நாயகனாக நடிக்கலாம்... எப்படிப்பட்ட மந்தமான சூழலிலும் வெற்றிக் கொடி கட்டலாம் என்பதற்கு உதாரணமாக வந்துள்ளது " திண்டுக்கல் சாரதி" திரைப்படம்.

கதாநாயகனாக கருணாஸ் நடித்துள்ள முதல் படம். ஒரு அர்த்தமுள்ள கதையின் நாயகனாக கருணாஸ் தனது புதிய கேரியரை ஆரம்பித்திருக்கிறார். அச்சகம் நடத்தும் சாரதி நிறத்தில் கறுப்பு. அந்தக் கறுப்பு மனதிலும் தங்கிவிடுகிறது. தாழ்வு மனப்பான்மை உருவில்.

மகா கறுப்பியாக உள்ள பெண்கள் கூட கட்டிக்கொள்ளத் தயங்கும் சாரதியை அழகான ஒரு சிவப்புப் பெண் மணக்க இசைகிறாா்.

தான் கறுப்பாக, சுமாரா்க இருப்பதால் வந்த தாழ்வு மனப்பான்மை ,மனைவி மீதான அனாவசிய சந்தேகமாக மாறுகிறது.

இந்த சந்தேக புத்தியால் அவதிப்படும் சாரதி தனது உள்ளப் பிரச்சினைகளிலிருந்து எப்படி நல்ல இல்லத்தரசனாக மாறுகிறார் என்பது க்ளைமாக்ஸ்.

கருணாஸுக்காகவே பார்த்துப் பார்த்து தைத்த சட்டை மாதிரி கச்சிதமாகப் பொருந்துகிற ரோல் இது. அருமையாகச் செய்திருக்கிறார். யாருமே நல்ல வாய்ப்பு வரும் போதுதான் பிரமாதமாக ஜொலிக்க முடியும் என்பதற்கு கருணாஸ் ஒரு எடுத்துக்காட்டு .

கார்த்திகா இயல்பாக நடித்திருக்கிறார். நடிக்க நிறைய வாய்ப்பு... அதை நன்றாகவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

நாசர்,வெண்ணிற ஆடை மூர்த்தி உட்பட ,மற்ற நடிகர்கள் எல்லாருமே அருமையாகச் செய்திருக்கிறார்கள்.ஒவ்வொரு காட்சியிலும் இயக்குநரின் அபார நம்பிக்கை தெரிகிறது. ஒரிஜினல் மலையாளக் கதையான 'வடக்கி நோக்கி யந்திரம்' தந்த தெம்பு அது.

தினாவின் பாடல்கள் சுமார்தான். ஆனாலும் , சன்.டி.விளம்பரங்கள் செய்த மாயாஜாலம் அவற்றையும் ஹிட்டாகியிருக்கின்றன.புதிய இயக்குநர் சிவசண்முகனுக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது.வரவேற்க வேண்டிய படம். சன் பிக்சர்ஸுக்கு இன்னொரு வெற்றிப் படம்!!

# திகில் படம் 'குயில்'

மூன்று இளைஞர்களும் இரண்டு பெண்களும் நல்ல நண்பர்களையும், தோழிகளையும் போல் நெருங்கிப் பழகுகிறார்கள். அவர்களுக்கு இடையே ஏற்படுவது நட்பா, காதலா? என்ற கேள்வி எழும் போது சில விபரீத சம்ப வங்கள் நிகழ்கின்றன. திடுக்கிடும் திருப்பங்கள் ஏற்படு கின்றன.சஸ்பென்ஸ் திகில் காட்சிகளைக் கொண்ட கதையம் சத்துடன் தயாராகும் இந்தப் படத்துக்கு குயில் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

பெங்களூரைச் சேர்ந்த திரைப்பட விநியோகஸ்தர் ரமேஷ்ரெட்டி கதாநாயகனாக நடிப்பதுடன் படத்தை தயாரிக் கிறார். இவருடன் புதுமுகங்கள் வெங்கட்காந்த்,ரிஷி, அகரம், வரத், பானு, மகேஸ்வரி,அனு ஆகியோரும் நடிக் கிறார்கள்.

டைரக்டர் எஸ்.ஏ. சந்திரசேகரனிடம் உதவி டைரக்ட ராக இருந்தவரும், லவ்ஸ்,அகம் அறிய ஆவல் ஆகிய படங்களை டைரக்ட்டு செய்தவருமான கே.ஜெயபாண்டி யன் இந்தப் படத்தை இயக்குகிறார். படத்தின் கதை திரைக்கதை வசனத்தையும் இவரே எழுதியிருக் கிறார். ஸ்ரீ பஞ்சமுகி மூவிஸ் சார்பில் படம் தயாராகிறது. சென்னை ,நெல்லை, பெங்களூர் , மைசூர் ஆகிய இடங்களில் படப்பிடிப்பை நடத்த திட்டமிட்டு இருக்கிறார்கள்.


சினிமா

# அப்பா செல்லமா அம்மா செல்லமா



# மாப்பிள்ளை தேவை -பெண் ஸ்னேகா!



கை நிறையப் படங்களுடன் படு பிசியாக நடித்துக் கொண் டிருக்கும் ஸ்னேகாவுக்கு பொருத் தமான மாப்பிள்ளையை தேடும் முயற்சியில் அவரது குடும்பத் தினர் இறங்கியுள்ளனராம்.

தனது நிலையிலிருந்து பெரிய அளவில் இறங்காமலேயே தொடர்ந்து கலக்கி வரும் நடிகை ஸ்னேகாதான் கவர்ச்சி காட்ட மாட்டேன் என்று ஆரம்பத்தில் பிடிவாதமாக இருந்தார். இருந் தாலும் காலத்தின் போக்கில் போய்த்தான் ஆக வேண்டும். என்ற நிலை வந்தபோது லேசான கவர்ச்சிக்கு பச்சைக் கொடி காட்டினார்.

இருந்தாலும் கூட ஸ்னேகா படு ஆபாசமாக நடித்தார். என்று எந்தப் ப டத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவுக்குத்தான் அவர் நடித்த அத்தனை படங்களும் உள்ளன. டீசன்ட்டான கேரக்டர்களை பார்த்து நடித்து வரும் ஸ்னேகா விளம்பரங்களிலும் முடிசூடா ராணியாக விளங்குகிறார்.

தற்போது வைஜெயந்தி ஐபிஎஸ் படத் தின் ரீமேக்கான பவானியில் படு கலக்கலாக அதிரடி வேடத்தில்நடித்துக் கொண்டிருக்கிறார் ஸ்னேகா. இப் படத்தை பெரிதும் எதிர் பார்த்துள்ள அவர் இப் படத்துக்காக பிரயத்தனம் எடுத்து தனது உடலை டிரிம் செய்துள்ள ஸ்னேகா சண்டைக் காட் சிகளிலும் கலக்கிக் கொண்டிருக்கிறார்.

தமிழ் தவிர தெலுங்கிலும் நிறையப் படங்களுடன் உள்ள ஸ்னேகாவிடம் தற்போது கைவசம் 10க்கும் மேற்பட்ட படங்கள் உள்ளனவாம். இப்படி ஸ்டூடியோ ஸ்டூடியோவாக ஸ்னோக பிசியாக போய்க் கொண்டிருக்கும் நிலையில் அவரது குடும்பத்தினரோ நல்ல மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்கும் வேலையில் இறங்கியுள்ளனராம்.

நல்லவராக அமைந்தால் திருமணத்தை முடித்து விடுவது என்றமுடிவில் அவர்கள் இருக்கிறார்கள். ஸ்னேகா இதற்கு தடைசொல்லவில்லை என்று தெரிகிறது.

# 'தல'யை படம் பார்க்க வைத்த சிம்பு



தான் நடித்து வெளிவந்திருக்கும் "சிலம்பாட்டம்" படத்தை அஜித்திற்கு திரையிட்டு காட்டியுள்ளார்சிம்பு. எதிரும் புதிருமாக இருந்த ஹீரோக்களெல் லாம் இப்போது நட்புறவு கொண் டுள்ளது கோலிவூட்டில் ஆரோக் கியமான சூழ்நிலையை ஏற்படுத்தி யுள்ளது.எம்.ஜி.ஆர், சிவாஜி காலத்திலிருந்தே நம்பர் ஸ்தா னத்தில் போட்டியிருந்து கொண்டே வருகிறது. சிம்பு தனுஷ்வரை நீடித்த இந்த நீயா நானா? போட் டியில் இப்போது ஆரோக்கிய நிலை உருவாகியுள்ளது.




இரண்டு வருடங்களுக்கு முன் அஜித்தும் விஜய்யும் அடிக்கடி கருத்து மோதல் களில் ஈடுபட்டனர். இவர்களது அடுத்த தலைமுறையான சிம்பு தனுஷின் நிலைப்பாடும் இப்படித்தான் இருந்தது. ஆனால், இப்போது அந்த மனக்கசப்புகளையெல்லாம் மறந்து இவர்படத்தை அவர்பாராட்டுவதும் அவர்படத்தை இவர் பாராட்டுவதுமாக மூழ்காத பிரண்ட் ஷிப்பாக மாறி விட்டனர்.

சிம்பு, அஜித்தின் தீவிர ரசிகர். தனது படங்களில் 'தல' என்ற ஒரு வார்த்தையாவது இடம்பெறவேண்டும் என்று விரும்புவார். தற்போது அவர் நடித்து வெளி வந்திருக்கும் 'சிலம்பாட்டம்' படத்தில் தல புராணம் பாடும் சில காட்சிகள் உண்டு. அஜித்தின் படம் வெளியானால் முதல் நாளில் முதல் ஷோவை பார்த்து ரசிப்பதுடன் 'தல'க்கு போனைப் போட்டு புகழ்வது சிம்புவின் வழக்கம்.

இந்நிலையில் 'சிலம்பாட்டம்' படத்தை பார்க்க வேண்டுமென அஜித்திடம் அன்பு வேண்டுகோள் விடுத்தி ருக்கிறார் சிம்பு.அஜித்தும் அதனையேற்றுக் கொண்டு படத்தைப் பார்த்தார்.போர் பிரேம் ப்ரிவியூ தியேட்டரில் அஜித்தும் அவரது சில நண்பர்களும் மட்டுமே படத்தைப் பார்த்தனர்.

படம் முடியும் வரை தியேட்டருக்கு வெளியே நின்ற சிம்பு'தல' என்ன சொல்லப் போகிறாரோ என நகம் கடித்துக் கொண்டிருந்தாராம். படம் பார்த்து வெளியே வந்த அஜித், சிம்புவை பாராட்ட சிலிர்த்துவிட்டதாம் சிம்புவிற்கு.

# பொலிஸ்காரரின் சைக்கிளில் சூட்டிங்குக்கு வந்த ரஜினி



ரஜினி நடிக்கும் எந்திரன் படத் தின் ஷூட்டிங் 3 நாட்களாக மீஞ் சூரில் நடந்தது. ரஜினிகாந்த் - ஐஸ்வர்யாராய் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட் டன. தினமும் இரவு 7மணிக்கு படப்பிடிப்பு தொடங்கி மறுநாள் அதிகாலை 3 மணிவரை படப்பிடிப்பு நடந்து வந்தது.

இதையொட்டி அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டது. படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக ரஜனி தனது போயஸ் கார்டன் வீட்டிலிருந்து மாலை 4.30 மணிக்கு புறப்பட்டார்.


கோயம்பேடு 100 அடி ரோடு வழியாக மீஞ்சூருக்கு போய்க் கொண்டிருந்தபோது மணலி அருகே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பல கிலோ மீற்றர் தூரத்துக்கு பஸ், கார், வான் மற்றும் கண்டெய்னர் லொறிகள் நின்றிருந்தன.

இதனால் போக்குவரத்து நெரிசலில் சிக்கியவர் இரவு 7 மணிவரை மீஞ்சூரை அடைய முடியவில்லை.

இதையடுத்து அங்கு வந்த போக்குவரத்து பொலிஸ் காரரை அழைத்து தன்னை மீஞ்சூரில் இறக்கி விட முடியுமா என்று ரஜினி கேட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து ரஜினியின் அடையாளம் தெரியாமல் இருக்க தனது மழை கோர்ட்டையும் ஹெல்மெட்டையும் தந்தார் பொலிஸ்காரர். அதை அணிந்து கொண்டு ரஜினி அந்த மோட்டார் சைக்கிளில் படப்பிடிப்பு தளத்தை அடைந் தார்.

ரஜினி பைக்கில் வந்திறங்கியதைப் பார்த்து இயக்குநர் ஷங்கர் உள்ளிட்ட படப்பிடிப்பு குழுவினர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்களாம்.



# Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## அடைமழையால் அவதியுறும் வன்னி மக்கள்

வன்னியில் மீண்டும் ஏற்பட்ட அடை மழை காரணமாக குடியிருப்புகளினுள் வெள்ளம் உட்புகுந்து ஆயிரக்கணக்கில் மக்கள் மீளவும் இடம்பெயர்ந்துள்ளனர்.

அசமந்த காலநிலை காரணமாக உணவு வாகனத்தொடரணியின் பயணமும் கேள்விக் குறியாகியுள்ளது. வன்னியில் உள்ள வைத்தியர்கள் மிகவும் சிரமப்பட்டு வைத்திய சேவையில் ஈடுபடுகின்றனர்.



இதேவேளை, கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவில் ஏற்பட்ட அடை மழையினால் மூவாயிரம் ஏக்கர் விவசாய நிலம் முற்றாக அழிவடைந்துள்ளது.

இடம்பெயர்ந்து வாழும் மக்களின் குடிசைகள் மற்றும் தற்காலிக குடியிருப்புகள் நீரினால் அடித்துச்செல்லப் பட்டுள்ளன. மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளனர். எங்கு செல்வது என்று தெரியாது அங்கலாயிக்கின்றனர்.

இத்தகைய ஆபத்தான சூழ்நிலையில் பொதுக்கட்டடங்களில் தஞ்சம் புகுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் எமில்டா சுகுமார் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அது குறித்து அவர் கருத்துத்தெரிவிக்கையில், புதுகுடியிருப்பு, முல்லைத்தீவு ஆகியன வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

குளங்கள், கால்வாய்கள், கிணறுகள், கடல் நீர் ஏரிகள் நீர் நிறைந்து வழிவதனால் வீதிகள் பல சேதமடைந்துள்ளன. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு வரையான பாதையும் முல்லைத்தீவு, பரந்தன் செல்கின்ற பாதையும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன என்றார்.

இந் நிலையில் வன்னியில் இருப்பிடங்களை இழந்தவர்களுக்கு தற்காலிக குடியிருப்புகளை அமைப்பதற்காக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு புத்தளத்தில் இருந்து 6 ஆயிரம் கிடுகுகளையும் வவுனியாவில் உள்ள SEED அரச சார்பற்ற நிறுவனம் ஒரு இலட்சம் கிடுகுகளையும் வவுனியா அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளது. இவை பகுதி பகுதியாக வன்னிக்கு அனுப்பி வைக்கப்படும் என வவுனியா அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு ஒரு வாரத்திற்கான உணவு கையிருப்பு மட்டுமே உள்ளது எனவும் உணவு வாகனத்தொடர் அணியை மக்கள் நம்பி வாழ்கின்றனர் எனவும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான 40 லொறிகளில் பொருட்கள் வந்தடைந்துள்ளதாகவும் எனினும் இவற்றை கொள்வனவு செய்வதற்குரிய ஆற்றல் மக்களிடம் குறைந்துவருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் மக்களுக்கு உண்ணுவதற்கு மரக்கறிகள் எதுவும் இங்கு இல்லை. காய்கறிகள் 700 அல்லது 800 ரூபாவுக்கு மேல் விற்பனையாகின்றன. அவற்றை எடுக்கக் கூடிய வசதிகள் மக்களிடம் இல்லை. கடலுக்கு மீன் பிடிக்க மக்கள் செல்ல அஞ்சுவதால் மீன் கிடைப்பதும் இங்கு கடினமாக இருக்கிறது. எனவே மக்கள் உணவைப் பெறுவதில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள் என எமல்டா மேலும் தெரிவித்தார்.

மழையினால் ஏற்படும் தொற்று நோய்களையும் ஆபத்துக்களையும் கட்டுப்படுத்த முல்லைத்தீவு வைத்தியசாலை அதி காரிகள் கடும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர். வெள்ளத்தினால் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பாதிப்படுவதைத்தவிர்க்க வெளியே தனியே செல்வதை தடுக்குமாறும் நடமாட்டங்களையும் பிரயாணங்களையும் குறைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, வெள்ள நீரினால் கிணறுகள் பாதிப்புற்றுள்ளது. குடிநீருக்கான வசதிகள் கேள்விக் குறியாகியுள்ளது. கிணறுகள் மற்றும் பொது மலசலகூடங்ககளை துப்பரவு செய்யும் பணிகளில் வைத்தியசாலைத் தரப்புக்கள் ஈடுபட்டுள்ளனர் என முல்லைத்தீவு வைத்தியசாலையின் தொற்று நோய் தடுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி ஒஸ்மன் சார்ளஸ் தெரிவித்தார்.

அடைமழையினால் வாந்திபேதி, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவக் கூடிய அபாயங்கள் காணப்படுகின்றன. இதனை நாங்கள் கருத்திற்கொண்டு எமது சுகாதார ஊழியர்கள் மூலம் அடைமழை ஏற்பட்டுள்ள பகுதிகளில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் இட்டு பொது மலசல கூடங்களை தொற்று நீக்கிகளைக் கொண்டு தொற்றுநீக்கி வருகின்றோம். முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் இருப்பவர்கள் முல்லைத்தீவு நகர பொது வைத்தியசாலையில் அவர்களுக்குரிய வைத்திய வசதிகளையும் புதுக்குடியிருப்பு பகுதியில் இருப்பவர்கள் புதுக்குடியிருப்பு பிராந்திய வைத்தியசாலையில் அவர்களுக்குரிய மருத்துவ வசதிகளையும் உடையார்கட்டு, விஸ்வமடு, மூங்கிலாறு பகுதியில் இருப்பவர்கள் எமது உடையார்கட்டு, மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலைகளிலும் மருந்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஒஸ்மான் தெரிவித்தார்.

வன்னி மக்கள் மீது இயற்கையேனும் கருணை காட்ட வேண்டும் என அனைவரும் விரும்புகின்றனர்.

## வன்னியில் இடம்பெயர்ந்த கர்ப்பிணித்தாய்மார்களுக்கு போசனைக் குறைபாடுள்ளது

தொடர்ச்சியாக இடப்பெயர்வுகள் சம்பவிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதார நிலைமைகள் தொடர்பில் அறிந்து கொள்ளும் நோக்கில் மாவட்ட வைத்திய அதிகாரி தங்கமுத்து சத்திய மூர்த்தி அவர்களை நேர் கண்டுள்ளோம்.

**கிளிநொச்சி மாவட்டத்தைப் பெறுத்த வரையில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பொதுவாக எவ்வகையான நோய்த் தாக்கங்களுக்கு உட்படுகின்றார்கள்? அவற்றில் இருந்து விடுபடுவதற்கு எவ்வாறான வழி முறைகளை அவர்கள் கைக்கொள்ள வேண்டும்?**

ஆஸ்மா நோய் அநேகமானவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. தூசுகள் நிறைந்த வீதிகளில் பிரயாணம் செய்வதாலும் அவர்கள் இருக்கின்ற சூழல் பொருத்தமானதாக இல்லாததாலும் பலருக்கு சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்கு மக்கள் தங்களுடைய தங்குமிடங்களை தூசு கிளம்பும் வீதிகளுக்கு அருகாமையில் அமைக்காமல் சற்று தொலைவில் அமைத்துக்கொண்டால் அவர்கள் அவற்றில் இருந்து விடுபட முடியும். அத்தோடு கிரமமாக அண்மையில் இருக்கின்ற வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அவர்களுக்கு ஏற்படவிருக்கின்ற அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ள முடியும். சலரோக வியாதியின் காரணமாவும் பலர் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்கள். அவர்கள் கிரமமாக தமக்குரிய மருந்துகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் பின் விளைவுகளை தவிர்த்துக்கொள்ள முடியும்.



**அங்குள்ள மக்களின் மன நிலை எவ்வாறு உள்ளது?**

வன்னியிலுள்ள அனைவருக்கும் போர் குறித்த பதற்ற நிலை காணப்படுகின்றது. எனவே அனைவருமே மன நோயினால் பாதிக்கப்படுகின்றார்கள். அந்த வகையில் குறிப்பாக கடுமையான இருதய வருத்தத்திற்கு உட்பட்டவர்கள் சத்தங்கள் கேட்கின்றபொழுதும் மன வருத்தங்களுக்கு உள்ளாகின்ற போது அவர்களால் தாங்கிக்கொள்ளவே முடியாத நிலை ஏற்படும். அவ்வாறானவர்கள் போர் நடைபெறுகின்ற இடத்தில் அகன்று ஓர் பாதுகாப்பான இடத்தில் தங்களுக்கான வீடுகளை அமைத்து குடி இருக்க வேண்டும்.

**கர்ப்பிணித்தாய்மார்களுக்கான சிகிச்சைகள் மற்றும் அவர்கள் போசனை உணவை பெறுவதற்கான வழி வகைகள் குறித்து கூற முடியுமா?**

தற்போது எம்முடைய கிளினிக்கிற்கு 2500க்கும் அதிகமான கர்ப்பிணித் தாய் மார் கள் வந்து செல்கின்றாாகள். அவர்களுக்குரிய தடுப்பூசி, போசனை உணவு போன்றவற்றை பெறுவதற்காக வந்துசெல்கின்றார்கள். கர்ப்பி ணிகளைப் பெறுத்தவரை போசனை உணவுக் குறைபாடு நிலவுகின்றது. அந்தப்பகுதிகளில் மரக்கறிச் செய்கை குறைவாகக்காணப்படுகின்றது. கடல் உணவுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே அவர்கள் நிறை உணவைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்த்தன்மை காணப்படுகின்றது. இருப்பினும் அவர்களுக்கு வழங்கப் படும் திரிபோஷா, கோன்சோயா போன்றவற்றை அவர்களே உண்ணவேண்டும். ஆனால் அவற்றை அவர்கள் தங்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கிவிட்டு அவர்கள் உண்ணாமல் இருக்கின்ற நிலை காணப்படுகின்றது. அவர்கள் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பழவகைகள், கீரைகள் போன்றவற்றை உண்டதன் மூலம் மந்த போசாக்கினால் ஏற்படும் நோயில் இருந்து விடு பட முடியும்.

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலி பரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு தடுப்பூசியின் பயன்கள் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்துக்கூறும் வகையில் ***தடுப்பூசி*** குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## தடுப்பூசி



மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதியில் வாராவாரம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய விடயங்களை மையப்படுத்தி குறுநாடகங்கள் இடம் பெற்று வருகின்றன.மனிதன் வளர்ச்சி அடைந்து செல்கின்றான் என்றால் அவனுக்கு நிகராக நோய்களும் புதிது புதிதாக உருவாகின்றன. நிச்சயமாக இந்த நோய்கள் மனித குலத்திற்கு அச்சுறுத்தலாக அமைகின்றன. எமது கவன மற்ற செயற்பாடுகளால் தான் எமக்கு நோய் ஏற்படுகின்றது. எமது குழந்தைகளுக்கு நோய் ஏற்பட நாமே காரணகர்த்தாவாகி விடக்கூடாது. குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுப்பதில் முக்கிய பங்கு வகிப்பது அவர்களுக்குரிய தடுப்பூசிகள். உரிய கால எல்லைக்குள் உரிய தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளுதல் வேண்டும். இந்த விடயம் பற்றிக் கூறுவதாகவே *தடுப்பூசி* குறு நாடகம் அமைந்தது.

எமது நாடகத்தில் வரும் பெற்றோர் தமது பிள்ளைகள் விடயத்தில் கவனக்குறைவாக இருக்கின்றார்கள். குழந்தைகளுக்கான தடுப்பூசி பற்றிய அறிவு இவர்களிடத்தில் இல்லை. இதனால் தமது முதல் குழந்தைக்கு எந்த விதமான தடுப்பூசியும் போடவில்லை. அதனால் ஏற்படும் பின் விளைவுகள் பற்றியும் அவர்கள் சிந்திக்கவில்லை. அயலவர் ஒருவர் மூலமாக குழந்தைகளுக்கான தடுப்பூசி பற்றி தெரிந்து கொள்கிறார்கள்.

தடுப்பூசியின் அவசியம் என்ன என்று நோக்கும் போது குழந்தைகள் வளரும் பருவத்தில் வரும் நோய்களுக்கு எதிரான சக்தியை அவர்களது உடம்பில் ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு தடுப் பூசியாலும் ஒவ்வொரு நோய்களுக்கான எதிர்ப்புச் சக்தி அவர்களுடைய உடலுக்கு கிடைக்கிறது. உரிய காலவரையறைக்குள் தடுப்பூசிகளை போட்டு முடித்துவிடல் வேண்டும். ஒரு ஊசி விடுபடுமிடத்து பூரணமான பலன் குழந்தைகளுக்கு கிடைக்காமல் போகும். இலங்கையைப் பொறுத்தவரையில் போலியோ நோயினால் தாக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக்காரணம் போலியோ சொட்டுமருந்து வழங்கும் திட்டத்தை அரசாங்கம் கட்டாயமாக்கியமை தான்.

இரும்புக்கம்பி, தகரம் ஆகிய பொருட்களால் ஏற்படும் காயங்களால் உடலில் ஏற்பு ஏற்படும். ஏற்பு வைக்கும் தன்மைக்கு எதிரான தடுப்பூசி சிறு வயதில் போடப்பட்டிருந்தால் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்பு ஏற்படாது. அம்மைப் பால் குத்தாமல் விட்டால் சின்னமை நோயை எதிர்க்கும் சக்தி உடலில் இல்லாம் போகும். இவ்வாறான விடயங்களை சமூகத்தில் எல்லா மட்டங்க ளில் உள்ளவர்களும் அறிந்திருக்க வேண்டும். எதிர்காலத்தில் ஆரோக்கியமான பிள்ளைகள் உள்ள சமூகம் உருவாக வேண்டும் என்றால் பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தமது குழந்தைகளுக்கு உரிய காலத்திற்குள் தடுப்பூசிகளைப் போட்டு முடித்து விட வேண்டும். தடுப்பூசி என்ற எமது நாடகத்தின் மூலம் நாம் வற்புறுத்திக் கூறும் இதைத்தான்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள் இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளை ஒலிபரப்பக் காத்திருக்கிறோம். உங்கள்கதைகள் மற்றவர்களுக்கு படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக்கிழமை களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews. lk.Radio.Voices of peace.lk ) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

### மீண்டும் வாழ்வோம்

"மீண்டும் வாழ்வோம்"
திட்டமானது இலங்கையின்
அசாதாரண
சூழ்நிலைகளினால்
இடம்பெயர்ந்து முகாம்களில்
வாழும் மக்களுக்காகவும்
மீள்குடியேறி உள்ள
வர்களுக்காகவும்
தகவல்களை வழங்கும்
பரந்து பட்ட மனி தாபிமான
செயற்றிட்ட அமைப் புக்களின்
ஓர் அங்கமாகும்

### உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.


த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774 952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

# யுத்த முனையில் பிறக்கப் போகும் 2009 தேர்தல் ஆண்டாகவும் பெயர் எடுக்கும்



2009 பிறப்பதற்கு இன்னமும் நான்கு நாட்களே எஞ்சியிருக்கும் நிலையில், கிளிநொச்சியை மீட்பதற்கான யுத்தம் முடிந்தபாடாகவில்லை. 2009 ஆம் ஆண்டும் யுத்த ஆண்டாக நகர்வடையப் போவது திண்ணம். பிறக்கப் போகும் 2009 ஆம் ஆண்டு அமைதியைத் தருமா? என்ற கேள்விகள் தேவையற்றவை. அந்தப் புதிய ஆண்டின் நுழைவே போர் முனையில் தான் நடக்கிறது.

ஆனால் 2008 ஆம் ஆண்டில் எதிர் பார்க்கப்பட்ட பொதுத் தேர்தல் 2009 ஆம் ஆண்டில் சாத்தியமாகும் என நிறுதிட்டமாகக் கூறிவிடலாம்.



2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படுமென்ற செய்திகள் ஊட கங்களில் பல தடவைகள் இடம்பிடித்துள் ளன.

தென் பகுதி அரசியல் கட்சிகளும் பொதுத் தேர்தலை நோக்கிய பயணத்திற்குத் தம்மை தயார்ப்படுத்தும் நிலையில், பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

### கருஜெயசூரியாவின் கட்சி மாற்றம்

ஆளும்கட்சியில் இருந்த அமைச்சர் கருஜெயசூரியா தனது அமைச்சுப் பதவியை உதறித் தள்ளிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டது கூட பாராளுமன்றம் கலைக்கப்படும் என்ற நம்பிக்கையிலேயே. பாராளுமன்றத்தைக் கலைத்துக் பொதுத் தேர்தலை நடத்தும் திட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருப்பதால், அமைச்சுப் பதவியைத் தூக்கி எறிந்து விட்டு தனது தாய் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென கருஜெயசூரியா முடிவெடுத்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்வ தன் மூலம் தனக்கான முக்கிய பதவியை பெற்றுக்கொள்ள முடியும் என்பது அவரின் எதிர்பார்ப்பாக இருந்தது.

### பாராளுமன்ற கலைப்பு பின்போனது எப்படி?

பூநகரியைப் படையினர் கைப்பற்றிய வெற்றியைக் கொண்டாடும் ஏற்பாடுகள் தென்பகுதியில் களைகட்டியிருந்த போதிலும் ஏற்பாட்டின் எடுப்பிற்கேற்ப வெற்றிவிழா சோபிக்கவில்லையென்றே கூறவேண்டும். பூநகரியைக் கைப்பற்றியதோடு போர் முடிவடைந்திருக் குமாயின் பிரதேசத்தை மீட்ட தற்கான வெற்றிவிழா சாத்தியமாகவும், சிறப் பாகவும் அமைந்திருக்கும்.




## ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் அதிசயப்பட என்ன இருக்கு

ஆனால் போர்முனையில் படையினர். எதிர்த்தாக்குதலில் விடுதலைப் புலிகள். போரில் விழுப்புண் அடைந்து மரணித்த வர்களின் உடலங்கள் பரஸ்பரம் ஒப்படைக் கப்படுகின்றன. இந்தப் பணியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்கிறது.

இந்நிலையில் பூநகரி வெற்றிக் கொண் டாட்டம் பிசுபிசுக்கவே செய்யும்.

### பூநகரிப் பாதை திறக்கப்படுமா?

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பூநகரியை மீட்டுவிட்டோம் என்ற செய்தியை முன்வைத்த அரசு அதற்கும் மேலாக பூநகரித் தரைவழிப் பாதையைத் திறந்து பயணத்திற்கான வசதிகளை செய்ய வுள்ளோம் என உரக்கக் கூறியது,

இது விடயத்தில் அரச தரப்பிற்குள்ளேயே போட்டா போட்டி நிலவியதைக் காணமுடியும்.

பூநகரிப் பாதையைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்று ஒருவர் கூறினால் மற்றவர் ஒரு வாரத்தில் பாதை திறக்கப்படுமெனக் கூறுவார்.

இறுதியில் ஒரு வாரத்தில் பூநகரிப் பாதை திறக்கப்படும் எனக் கூறும்போது, அரசியல்வாதிகள் எழுந்தமானமாகக் கதைப்பதுதான் வழக்கம் என்று மக்கள் இலகுவில் புரிந்துகொள்ள முடிந்தது. பூநகரிப் பாதையின் திருத்த வேலைகள், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளின் தாக்குதல் யுக்திகள் என எவற்றையும் கருத்திலெடுக்காது, எழுந்தமானமாக அடுத்த வாரம் பூநகரிப் பாதை திறக்கப்படுமெனக் கூறுவதானது, இலங்கை இனப்பிரச்சினை ஏன் இத்துணை தூரம் நீடித்துச் செல்கிறதென் பதற்கான கேள்விக்குத் தரக் கூடிய பதிலாக அமையும்.

இலங்கையின் அரசியல்வாதிகள் ஒரு போதும் யதார்த்தத்தை உணர்ந்தவர்களாக கதைப்பதில்லை. அவர்கள் பொருத்தமற்ற கதைகளையே கதைத்து வருகிறார்கள்.

சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக இருந்தபோது, சமாதானத்திற்கான யுத்தம் நடத்தினார்.

உலகில் எங்குமில்லாத ஒரு புதிய நடைமுறை அது. சமாதானத்திற்கு எதிரானது சண்டை. இரண்டு எதிர்ப்பதங்களைக் கொண்டு ஒரு முடிவைப் பெறுவதென்பது ஒருபோதும் இயலாத காரியம்.

இப்போதுகூட, மஹிந்தராஜபக்ஷ, "விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு வந்தால் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கலாம்" என அறிவிக்கின்றார்.



ஒரு நாட்டின் அதி உயர் பதவியை வகிக்கும் ஒருவர் இவ்விதம் கூறுவது பொருத்துடையதா? என ஆராய வேண்டும். சாதாரண பொதுமக்களின் சிந்தனைக்குக் கூடத் தெளிவாகத் தெரிந்த விடயம் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பதென்பது எக்காலத்திலும் நடைபெறாதொன்று, அப்படியாயின் நடைமுறைக்குச் சாத்தியமற்றதைக் கூறுவதன் மூலம் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

இத்தகைய நடைமுறைக்குச் சாத்திய மற்ற விடயங்களைப் பேசிப் பேசியே முப்பது வருடங்கள் வீணாகிப் போய்விட்டன. நடைமுறைக்குச் சாத்தியமற்ற பட்டியலில் தற்போது பூநகரிப் பாதையும் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

### தேர்தலைப் பின்தள்ளிய கிளிநொச்சி விவகாரம்


பூநகரியைப் படையினர் கைப்பற்றிய கையோடு தென்பகுதியில் கருத்துக் கணிப் பொன்று இடம்பெற்றது.

சண்டையா? சமாதானமா? என்பதே கருப்பொருள். அதிகப்படியானவர்கள் சண் டைக்குச் சார்பாகக் கருத்துத் தெரிவித்தனர். சமாதானத்தை முணுமுணுத்த சிங்களவர் கள் கூட, பூநகரிக்குப் பின்னர் தங்கள் உச்சாடனத்தை சண்டை என மாற்றிக் கொண்டனர். அந்தளவுக்கு தென்பகுதிப் பிரசாரம் வேகம் கொண்டிருந்தது.

எனினும், பூநகரி மீட்புக்கு அடுத்தது கிளிநொச்சி என்ற எதிர்பார்ப்பில் கிடைக்கும் வெற்றியைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்துவதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகத் தீவிரமாக இருந்தார்.

கிளிநொச்சியைக் கைப்பற்றியதும், அதற்கான வெற்றிவிழாக் களிப்பில் தென் பகுதியை ஆழ்த்திவிட்டு ஒரு நள்ளிரவுப் . பொழுதில் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்துவதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திட்டம்.

கிளிநொச்சியைக் கைபற்றுவதன் மூலம் தென்பகுதி மக்களின் ஒட்டுமொத்த வாக்கு களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உரிமையாக்கிவிடலாம். அதன் பின்னர் உதிரிக் கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்கத் தேவையில்லை என்ற நினைப்பே ஜனாதி பதியிடம் இருந்தது. ஆனால், ஜனாதிபதியின் திட்டத்திற்கும் விருப்பிற்கும்



விடுதலைப் புலிகள் சந்தர்ப்பம் வழங்கவில்லை. கிளிநொச்சியைக் கைப்பற்ற இன்னமும் 3 மாதங்கள் தேவையெனக் கூறப்படுகிறது.

இப்போது வன்னிப் போர்க்கள நிலை களும் மாற்றமுறுகின்றன. படைத்தரப்பின் சடலங்கள் தென்பகுதிக்கு அனுப்பப்படுவது மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு ஆரோக் கியமானதாகத் தெரியவில்லை.

**விதுரன்**

இடையில் இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் கொழும்பிற்கு வருவாராயின் 2009 ஆம் ஆண்டில் விருப்பமற்ற பாராளுமன்றக் கலைப்பை ஜனாதிபதி மஹிந்த செய்யவேண்டியதாக இருக்கும். இதன்போது ஆட்சி மாற்றம் இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை. எதற்கும் பிறக்கின்ற 2009 பதில் தரவே போகிறது. □

கட்டுப்பாடான சரியான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும்; இல்லையென்றால் நேர்மாறான விளைவுகள் தான் உண்டாகும்.

~ பிளேட்டோ

வலம்புரி

## நிவாரண ஏற்றத் தாழ்வுகளை நீக்க பொதுஅமைப்புகள் உதவ வேண்டும்

யாழ். குடாநாட்டு மக்களை யுத்தம், தொழில் இழப்பு, சுனாமி, நிஷா என செயற்கையும், இயற்கையும் வஞ்சம் தீர்த்துவிட்டன.

இதனால் நடுத்தர வர்க்கத்தில் இருந்தவர்களும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் நகர்த்தப்பட்டு விட்டனர். இப்போது பஞ்சம் அவர்களை வாட்டுகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் மூன்று வகையான நிவாரணக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவை

- இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம்
- நலிவுற்ற குடும்பங்களுக்கான நிவாரணம்
- சமுர்த்தி

இங்கு நலிவுற்ற குடும்பங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவை உலக உணவுத்திட்ட அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

இதனால் அந்த நிவாரணத்தைப் பெறுபவர்கள் ஓரளவுக்கு தங்கள் சீவனோபாயத்தை சமாளிக்க முடிகின்றது.

ஆனால் சமுர்த்தி நிவாரணத்தையும்,இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தையும் பெறுவோர் ஒருநேர உணவை மட்டுமே உண்ணும் அவல நிலையில் உள்ளனர்.

உலகில் எந்த மோதல்கள் இடம்பெற்றாலும் பஞ்சம் என்பது அனுமதிக்க முடியாததாகும். பசியால் வாடும் பாவத்திற்கு எவரும் இடம் கொடுக்கக் கூடாது.

'வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்' என்ற பாரதியின் குரல் எத்துணை அழகானது.

ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் -வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்கள் பசியால் வாடுகின்றனர் என்ற செய்தி நெஞ்சை இறுக்குகிறது.

அதிலும் பிஞ்சுக்குழந்தைகள், சின்னஞ்சிறுசுகள் பஞ்சத்தால் வாடுகின்றன என்ற செய்தி தாங்கொணாத் துயரம் தருவதாகும்.

இந்தத் துயரம் தமிழினம் என்பதற்கானது மட்டுமல்ல. முஸ்லிம், சிங்கள இனத்தில் இத்தகைய பஞ்சம் பசியிருந்தாலும் அது துன்பம் தருவதாகும்.

எனவே ஏழைக்குடும்பங்கள் பசியாற யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் உதவவேண்டும்.

உலக உணவுத்திட்டம் (WFP) நலிந்த குடும்பங்களுக்கான நிவாரணப் பணியில் ஈடுபடுவதுபோல சமுர்த்தி மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்திற்கும் உதவ முன்வரவேண்டும்.

அரசின் நிவாரண எல்லைக்குள் நின்று கொண்டு மக்களின் பசியைத் தீர்ப்பதென்பது முடியாத காரியம்.

எனவே இடம்பெயர்ந்த மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கு மேலதிகமாக உணவுப் பொருட்கள் வழங்க பொது அமைப்புகள் தங்களாலான நடவடிக்கைகளை முன்னெடுப்பது கட்டாயமானதாகும்.

இது விடயத்தில் ஏற்படக் கூடிய செலவு அதிகமாக இருக்கும் எனக் கருதும் பட்சத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அரச சார்பற்ற அமைப்புகள் இந் நிவாரணப் பணியில் ஈடுபடமுடியும்.

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பஞ்சம், பசி, பட்டினி என்ற அவலங்களின் விளைவு போசாக்கின்மையாக, நோய்த்தொற்றாக ஏற்பட்டு சிறுவர்களை முதலில் பாதிக்கும்.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டிய சூழ்நிலையில் நலிந்த சமுதாயம் உருவாகுமாயின் அதனை மீளமைப்பது என்பது முடியாத காரியம்.

எனவே சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் விரைந்து நிவாரண நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். இது காலத்தின் கட்டாயதேவை.

# மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்




'கவிதை' என்பது மிக இறுக்கமாகவும், வெண்பா, விருத்தம் ஆசி ரியப்பாவாக மரபு வழியில் எதுகை, மோனை, சந்தம் நிறைந்தவையாக ஆரம்ப காலத்தில் எழுதப்பட்டன. பாரதியார் காலத்தின் பின் அவை எளிமை மிகுந்தவையாக எல்லோராலும் புரிந்து பொருள் காணும் வகையில் எழுதப்பட்டு வந்தன.

எழுபதுகளுக்குப் பின் 'புதுக் கவிதை' என்னும் வடிவம் பெற்று பலவாறு எம் மண்ணில் எழுதப்பட்டு வருகின்றன. சொல் வீச்சே மூலதனமாகக் கொண்டுலவும் இக் கவிதை வடிவங்கள் கருவொன்றை மைய மாகக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் குணேஸ்வரன் முது தத்துவ மாணிப் பட்டம் பெற்ற இவர், 'துவாரகன்' என்னும் புனைபெயரில் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர்.

கவிதை, சிறுகதை ஆகியவற்றை எழுதி வரும் இவர் 1998 முதல் 2008 வரை ஈழத்துப் பத்திரிகைகளிலும், வேறு ஊடகங்களிலும் எழுதிய எழுபத்தி நான்கு கவிதை களைத் தொகுத்து இந் நூலை தினைப்புனம் வெளியீடாகத் தந்துள்ளார்.

இந்நூலின் முகப்புத் தோற்றம் விஞ்ஞான 'உயிரியல்' பாட நூல்களில் காணப்படும் படத்தினை ஞாபகப்படுத் துவது போல் இருப்பதால் வாசகர்களி டையே ஒரு குழப்பத்தை தோற்றுவித்து நிற் கிறது.

இருந்தாலும் இம் மண்ணிலிருந்து காவு கொள்ளப்பட்ட தன்னிரு மாமனார் களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இக்கவிதை நூலின் மூலம் தன் உள்ளத்தில் எழுந்த சமூகத்தின் அவலங்களுக்கு, எங்கெங்கோ நடக்கும் இயற்கையின் வெளிப் பாடுகளை உவமானமாக எடுத்தியம்பி கவிதைகளை நகர்த்திச் செல்வது கவிஞரின் திறமையை வெளிப் படுத்துகின்றது.

### நூல் விமர்சனம்

இதற்கு எடுத்துக்காட்டாக 'நான் இனி வெளியில் வாழ்வதை விட வெள்ளெலி களுடன் வாழப் போகிறேன்' என்ற வரிக ளைக் கூறலாம்.

'சமூக இயல்பை அதன் இருப்பை ஏற்ற இறக்கங்களை அழகுறச் சுமந்து கவிதைகளைப் பிரசவித்துள்ளார். பிரசவம் சுகப்பிரசவமாகவே அமைந்துள்ளது என பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் தனது அணிந்துரையில் கூறியிருப்பது இவரின் கவிதை நூலுக்கு அணி சேர்ப்பதாகவே உள்ளது.

*அரியாலையூர் சி. சிவதாசன்*

## நல்லூர் பிரதேச சபையின் நடமாடும் சேவை

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையால் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 2 மணிவரை நல்லூர் வடக்கு, கல்வியங்காடு சந்திர சேகரப்பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் அப்பகுதி மக்களுக்கான நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இச்சேவையில் இலவச ஆயுள்வேத வைத்திய நிபுணர்களால் நீரிழிவு, இரத்த அழுத் தம் சம்பந்தமான பரிசோதனைகள் மருத்துவ ஆலோசனை கள், ஏனைய மருத்துவச் சேவைகள் என்பன இடம்பெறவுள் ளது.

அத்துடன் கட்ட விண்ணப்பம் தொடர்பான விடயங்கள், ஆதனவரி மற்றும் பெயர் மாற்றம், அப்பகுதி அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் என்பன நேரடியாக ஆராயப்படவுள்ளதால் அப் பகுதி மக்களை இந் நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு சபை செயலாளர் மேரி யோசேப் சாந்தசீலன் தெரி வித்துள்ளார். (ஓ-6)

## மேலும் 7 பேர் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து இரு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். இவர்கள் மன்னாரில் இருந்து ஓலைக் குடா ஊடாக தமிழ்நாடு கடற்பரப்பை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக கியூ பிரிவு காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பின்னர் மண்டப முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மண்டப முகாமில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-4)

## வீடமைப்பு கொடுப்பனவின் இரண்டாம் கட்ட நிதியுதவி

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையின் கீழான வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கான வீடமைப் புக் கொடுப்பனவின் இரண்டாம் கட்ட நிதி உதவிகள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற் கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று அமைச்சு அலுவலகத்தில் கையளிக்கப்பட்டன.

இதன்பிரகாரம் காரைநகர், ஊர்காவற் றுறை, வேலணை ஆகிய பிரதேச செயலா ளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் நேற்று வழங்கப்பட்டதுடன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான வீடமைப்பு நிதி உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி முகாமையாளர் தரம் V1இல் இருந்து தரம் V க்கு தரமுயர்த்தப்படுவதற்கான போட்டிப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளரினால் மார்ச் மாதம் கொழும்பில் நடத்தப் படவுள்ளது. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் சமுர்த்தி முகாமையாளர் தரம் VI இல் 6 வருட சேவை யைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை ஜனவரி மாதம் 26 ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பலேவத்த, பத்தரமுல்ல என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை 26-12-2008 வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்தில் நேரில் வந்தோ பார்வையிடலாம். (ஓ)

# கடவுள் நம்மோடு


### பரமபிதா காட்டிய பாதை

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் தான் சிறப்பு எய்த வேண்டும், உயர்ந்தவனாக வேண்டும் என்பதுதான் ஆசை. ஆனால் இப்பிறப்பின் மென்மை அல்லது இப்பிறப்பின் சிறப்பு அவனின் பிறப்பின் சூழலையோ, பின்னணியையோ, செய்கின்ற தொழிலின் மேன்மையையோ சார்ந்ததன்று, பிறந்ததின் பயனை அடைய வேண்டும் என்றால் பிறப்பின் மேன்மையை உணர்ந்து எல்லோருடனும் நட்புடன் பழகி, அவர்களோடு தோள்கொடுத்து ஒன்றாகக் கலந்து வாழ வேண்டும். பிறரின் இன்ப, துன்பங்களில், வாழ்வின் உணர்வுகளோடு கலக்காதவன் தனி மனிதன். அவன் பிறப்பு மற்றவர்களுக்கு நன்மை பயக்காது.

தத்துவத்தில் நாம் படிப்பது கடவுள் இரண்டு தன்மைகளைக் கொண்டவர். 1.கடந்தவர் 2. கலந்தவர்

**கடந்தவர்:** கடவுள் என்றாலே கடந்தவர் என்று நாம் நினைக்கின்றோம். இது பழைய சித்தாந்தம். ஆனால் கடவுள் உண்மையுள்ளவராக மக்களின் வாழ்வில் அக்கறை உள்ளவராக இருந்தால் அவர் மக்கள் வாழ்வில் கலந்தவராகவும் இருக்க வேண்டும்.

**கலந்தவர்:** ஆனால் தற்கால இறையியலின் படி கடவுள் என்றால் கடந்து நிற்பவர் மட்டுமல்ல, கலந்து இருப்பவரும் ஆவார். மக்கள் துன்பப்படும் போது, தேவையில் துடிக்கின்ற போது, அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவிக்கின்றபோது கலக்காத கடவுள், ஈடுபடாத கடவுள், கடவுளாக இருக்க முடியாது. அப்படிப்பட்ட கடவுளை மக்கள் ஒடுக்கிவிடுவர். தன்னுடைய சாயலாகவும், பாவனையாகவும் மனிதனைப் படைத்த கடவுள் எவ்வாறு அவன் துன்பப்படும் போது வெறுமனே இருக்க முடியும்? எனவே, கடவுள் கல்லல்ல, மாறாக அவர் மக்களில் கலந்தவர். அவர் தான் புதிய ஏற்பாட்டு இறை மகன் இயேசு. இன்றைய நற்செய்தியும் இதையே மையப்படுத்து கின்றது.



நம் கடவுள் வாழும் கடவுள், உலகம் வாழ்வதற்காக மனிதனாகப் பிறந்த கடவுள். இந்தக் கடவுள் இயேசுவின் வழியாக வெளிப்படுத்தப்படு கின்றார். இவர் பாவிகளோ டும், ஏழை எளிய மக்களோ டும் வாழ்ந்தவர், வாழ்ந்து கொண்டிருப்பவர். இவரில் நாமும் வாழ்வோம், மீட்பு என்னும் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வோம்.

இயேசு நம்மோடு இல்லாத கிறிஸ்மஸ், கிறிஸ்மஸ் ஆக இருக்க முடியாது. அந்த இயேசுவை நம்மோடு வாழவைப்போம். நம் உள்ளத்தில், நம் இல்லத்தில், நம் உறவினர்கள், நண்பர்கள், அயலாரின் உள்ளங்களில் வாழவைப்போம், அப்போது தான் கடவுள் நம்மோடு என்பதற்கு அர்த்தம் பிறக்கும். கடந்தவராகவும், கலந்தவராகவும் இருக்கின்ற நம் இறைவனைப் போல் நாமும் பாவத்தை கடந்து அன்பில் கலந்தவராக வாழ்வோம்.

*ஜோன் ரொபேர்ட்*

# தினம் தினம் செத்துக்கொண்டிருக்கும் தமிழர்களை காப்பாற்ற மத்திய அரசு விரைந்து செயல்பட வேண்டும்

## முதலமைச்சர் கருணாநிதி வலியுறுத்தல்



நான் மட்டும் தலைவராகி உள்ள இந்த நேரத்தில் இலங்கையில் தினம் தினம் செத்துக்கொண்டிருக்கும் தமிழர்களை காப்பாற்றுவதற்கு அங்கு போர் நிறுத்தம் செய்ய மத்திய அரசு இனியும் தாமதமின்றி தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டுமென்று முதலமைச்சர் கருணாநிதி தி.மு.க. பொதுக்கூட்டத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் அங்கு செத்து மடிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றவேண்டியதுதான் முக்கியமான பிரச்சினை. அதற்கு தீர்வு காண்பதற்காக குறுக்கு வழியிலோ, வன்முறை மூலமாகவோ, தேச விரோதமாக செயல்பட்டோ அதை அடையவிரும்பவில்லை.

மத்திய அரசு எடுக்கும் முடிவை ஏற்றுக் கொள்வோம் என்றாலும் மத்திய அரசு வேகமாக முடிவெடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது. மத்திய அரசு தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஒரு தமிழனின் பிணம் விழுகிறது. அவர்களை புறம் தள்ளி இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற அனைவரும் உறுதி ஏற்போம்.

இலங்கைத் தமிழர்களுக்காக எதையும் துறப்போம். தேவைப்பட்டால் உயிரையும் துறப்போம் என்றார். ஏற்கனவே நானும் மற்றைய கட்சித் தலை வர்களும் சந்தித்த போது அளித்த உறுதி மொழியை விரைவில் நிறைவேற்ற வேண்டு மென்று பொதுக்குழுவிலும் தீர்மா னம் நிறைவேற்றியுள்ளோம்.

மத்திய அரசு இதற்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்று உருக்கமாக வேண்டுகோள் விடுக்கிறேன். இதுவிசயமாக பிரதமர் மன்மோகன்சிங்கிடம் முறையிட்ட போது, அவர் எங்களுக்குத் தந்த வாக்குறுதி பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி போர் நிறுத்தத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

அந்த வாக்குறுதியை வலியுறுத்தியே இங்கு தீர்மானம் போடப்பட்டுள்ளது. எனவே இந்தப் பொதுக்குழு தீர்மானத்திற்கு மதிப்பளித்து மத்திய அரசு அதனை நிறைவேற்றி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு பல்வேறு சாதனைகளை செய்திருக்கிறது. அந்த வரிசையில் இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களையும் சாதனையையும் செய்துமுடிக்க வேண்டும்.

அங்கே தமிழர்கள் அன்றாடம் உயிர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனை தடுத்து நிறுத்த குறுக்கு வழியில் மத்திய அரசை மிரட்ட நாம் விரும்பவில்லை. என்னுடைய நிலையை, தி.மு.கவின் நிலையை, தமிழக மக்களின் நிலைப்பாட்டை சட்டமன்றத்திலே விளக்கியிருக்கிறேன்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் ராஜீவ் காந்தியின் மறைவுக்கு பிறகு மறைவுக்கு முன்பு என்று இரண்டு பிரிவாக பார்க்க வேண்டுமென்று நான் கூறி இருக்கிறேன்.

இன்றைக்கு இலங்கையிலே தமிழர்கள் போர் காரணமாக இன்னமும் துன்பத்தை அனுபவித்து வருகிறார்கள். இதனால் தமிழ்நாட்டு தமிழர்கள் மட்டுமன்றி உலகம் முழுவதும் வாழும் கோடிக்கணக்கான தமிழர்கள் மனதில் ரணம் ஏற்பட்டிருக்கிறது.

அவர்களுடைய ரணத்தை ஆற்ற வேண்டிய பொறுப்பு அவர்களுடைய புண்ணுக்கு மருந்து போட வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உண்டு என்று நான் உருக்கமான வேண்டுகோளை விடுக்கிறேன்.

இந்த கோரிக்கையை ஏற்று இலங்கைத் தமிழர்களை மத்திய அரசு காப்பாற்ற வேண்டும். இதற்காக செய்ய வேண்டியதை செய்ய வேண்டும் என்று மத்திய அரசை மிக மிக பணிவாகவும் , மிக மிக உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை தமிழர்களுக்காக வாதாடுவதை சிலர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுவதாக சொல்லி வக்கிர புத்தியுடன் நடந்து கொள்கிறார்கள்.

இதன் பின்னராவது மத்திய அரசு மனம் இரங்கி இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களில் இதனையே முக்கிய தீர்மானமாக கருதி மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் கருணாநிதி.

அதாவது இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய அந்நாட்டு அரசை வலியுறுத்துவதற்கு ஏற்கனவே பிரதமர் அளித்த வாக்குறுதிப்படி பிரணாப் முகர்ஜியை விரைந்து அந்நாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று அக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஓ-6)

# ஈழத்தமிழர் அவலங்களை திரைப்படமாக்க முன்வந்தால் இலவசமாக இயக்குவேன்

## இயக்குநர் அமீர் தெரிவிப்பு




(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் கொடிய போரினால் ஈழத் தமிழர்கள் படும் அவலங்களையும், காஷ்மீர் மாநில மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும், திரைப்படமாக வெளியிட தயாரிப்பாளர்கள் முன்வந்தால் இலவசமாக இயக்கத் தயாராகவுள் ளேன் என ஈழத் தமிழர் ஆதரவாளரும், தென்னிந்தியத் திரைப்பட இயக்குநருமான அமீர் உறுதியளித்துள்ளார்.


இதுதொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் நடைபெறும் இன அழிப்புப் போரினால் ஈழத் தமிழர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இவர்களின் உண்மையான முகத்தை வெளியுலகிற்கு கொண்டு வர இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

அதேபோல் காஷ்மீர் மாநிலத்திலும் மக்கள் பெரும் துன்ப துயரங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே, இந்த மக்களின் துன்பங்களையும், அவலங்களையும் திரைப்படமாக எடுக்க தயாரிப்பாளர்கள் முன்வந்தால் அதை நான் ஒரு ரூபா கூட வாங்காமல் இலவசமாக இயக்கத் தயாராகவுள்ளேன் என்றுள்ளது. (ஓ-5)





புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பாடசாலையிலும் கோயிலிலும் தங்கியிருந்து மீண்டும் தமது பகுதிக்கு வருகை தந்த சுழிபுரம் பிரண்டவெட்டை மக்களுக்கு முரளிகிருஷ்ணா ஞாபகார்த்த திருநாவுக்கரசு சனசமூக நிலையத்தில் வைத்து வலி.மேற்கு பிரதேச சபையினால் ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இலைக்கஞ்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இலைக்கஞ்சி வழங்கப்படுவதையும், கலந்துகொண்ட ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர் ச.ஸ்ரீபிரியா, நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசுப்பிரமணியம் மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

## இலவச மருத்துவ முகாம்

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடாத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9மணி முதல் பகல் 12 மணி வரை பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள ஜே.சி. மெடிக்கல் கிளினிக்கில் நடைபெறவுள்ளது. (6-4)

# இலஞ்ச ஊழல் முறைப்பாடுகள் கடந்த வருடத்திலும் குறைந்துள்ளது

(கொழும்பு)

இலஞ்ச ஊழல்கள் தொடர்பாக இந்த வருடத்தில் ஆயிரத்து 298 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை 2007 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவான எண்ணிக்கையாக காணப்படுவதாக அந்த ஆணைக் குழுவின் விசாரணைகளுக்கான பணிப்பாளர் சிரேஷ்ட காவல்துறை அதிகாரி நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் இவ்வாறான ஆயிரத்து 446 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இனங்காணப்பட்ட 138 இலஞ்ச ஊழல் குற்றங்களில் 57 மாத்திரமே நேடியாகப் பிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் மற்றும் விசாரணைகள் ஆணைக்குழுவில் காவல்துறையினர் உள்ளிட்ட 67 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணைகள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நெவில் குருகே தெரிவித்துள்ளார். (ஓ-4)

# வடபகுதியில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு அடுத்த மாதம் மின்சாரம் வழங்க திட்டம்

(கொழும்பு)

வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப் படவிருப்பதாக எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து அரசாங்கப் படைகள் மீட்ட மன்னார் - பூநகரி (ஏ-32) வீதி மற்றும் ஏ-9 வீதி உள்ளிட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவிருப்பதாகவும், மின்சாரம் வழங்கும் திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அண்மையில் விடுவிக்கப்பட்ட மக்களுக்கு நன்மையளிக்கும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்திருக்கும் வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு கட்டமாகவே மின்சாரம் வழங்கும் இந்தத் திட்டமும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக செனவிரட்ண குறிப்பிட்டார்.

வடபகுதியில் வாழும் 6 இலட்சத்து 50 ஆயிரம் பேரில் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் அரசாங்கத்தின் மின்சாரம் வழங்கும் திட்டத்தின் மூலம் நன்மையடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட மன்னார் பகுதியில் வீதி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

# முரளிதரன் சுழல் சூறாவளி; பங்களாதேஷ் அணி பணிந்தது

## இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 293





(மிர்பூர்)

முரளிதரனின் சுழல் சூறாவளிக்கு ஈடு கொடுக்க முடியாமல் துடுப்பாட்டவீரர்கள் ஏமாற்ற பங்களாதேஷ் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக் களையிழந்து 177 ஓட்டங்களை மாத்திர மெடுத்தது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின் றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன் தினம் மிர்பூரில் ஆரம்பமானது. இப் போட்டி யில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தா டிய இலங்கை அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக் களையிழந்து 172 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சமரவீர–வாஸின் சிறப்பான 7ஆவது விக் கெட் இணைப்பாட்டத்தின் மூலம் கௌரவ மான இலக்கை அடைந்தது.

இந்த ஜோடி 7ஆவது விக்கெட்டுக்காக 99 ஓட்டங்களை எடுத்து மீட்க, இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக் கெட்டுக்களையுமிழந்து 293 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சமரவீர 90 ஓட்டங்களையும் வான் டொட் 44, சங்கக்கார 43 மற்றும் சமிந்த வாஸ் 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஸஹிப் அல் ஹசன் 5 விக் கெட்டுக்களையும் மோர்டாஷா, ஹீசைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த் தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால்–ஹெய்ல்ஸ் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் இந்த ஜோடி முதலாவது விக் கெட்டுக்காக 44 ஓட்டங்களை எடுத்தபோது இக்பால் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் அடுத்து களமிறங்கிய வீரர்கள் முரளிதரனின் துல்லியமான சுழல் பந்து வீச் சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஆட்டமிழக்க பங்களாதேஷ் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 177 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதில் ஹெய்ல்ஸ் 33 ஓட்டங்களையும் ஸிட்டிக், ஹீசைன் ஜீன்ர் ஆகியோர் தலா 29 ஓட்டங்களையும் மற்றும் ரஹீம் 26 ஓட்டங் களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 21 ஓவர்கள் பந்துவீசி 8 ஓட்டமற்ற ஓவர்கள் உட் பட 48 ஓட்டங்களைமாத்திரம் கொடுத்து 5 விக் கெட்டுக்களையும் சமிந்தவாஸ் 2 விக்கெட்டுக் களையும் பிரசாத், ஹேரத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஆஸி. அணியின் வேகத்தில் தவிக்கும் தென்னாபிரிக்க அணி

(மெல்போர்ன்)

சிடிலின் துல்லியமான வேகத்தில் முன்ன ணித் துடுப்பாட்ட வீரர் சொதப்ப தென்னாபிரிக்க அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 198 ஓட் டங்களை மாத்திரமெடுத்திருந்தது.

முன்னதாக தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 394 ஓட்டங்களை எடுத்து சகல விக் கெட்டுக்களையுமிழந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட், 2 இருபது–20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடு கின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் தென்னா பிரிக்க அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்றுமுன்தினம் மெல்போர்னில் ஆரம்ப மானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக் களையிழந்து 280 ஓட்டங்களை எடுத்திருந் தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ் திரேலிய அணி மைக்கெல் கிளார்க்கின் சிறப் பான ஆட்டத்தின் மூலம் அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழ ந்து 394 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையைப் பெற்றது.



இதில் மைக்கேல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களை எடுத்ததுடன் முன்னைய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 101 ஓட்டங் களை யும் ஹட்டிச் 54 ஓட்டங்களையும் மற் றும் ஹாடின் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில ஸ்ரையன் 5 விக்கெட்டுக் களையும் நிற்னி 2 விக்கெட்டுக்களையும் மற் றும் கலிஸ், மோர்கல், ஹரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி சிடிலின் துல்லியமான வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முன்ன ணித் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்ப நேற் றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட்டுக்களையிழந்து1 98 ஓட்டங்களை மாத்திரமெடுத்து.

இதில் அணித் தலைவர் சிமித் 62 ஓட்டங் களை எடுத்ததுடன் டுமினி ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் கலிஸ் 26, மோர்கல்21 மற்றும் அம்லா 19 ஓட்டங்களையும் எடுத் தனர். மக்கன்ஸி ஒட்டமெதனையும் எடுக்காம லும் டி வில்லியர்ஸ் 9 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழந்தனர்.

பந்து வீச்சில் சிடில் 3விக்கெட்டுக்களை யும் ஜோன்ஸன், ஹையூரிற்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# உலக டெஸ்ட் அணிக்கு தலைவராக தோனி

## ஆஸி.பத்திரிகை தெரிவு செய்தது

(மெல்போர்ன்)

உலக டெஸ்ட் அணிக்கு இந்தியாவின் மகேந்திர சிங் தோனி அணித்தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆரம்ப துடுப்பாட்ட வீரராக கௌதம் காம்பீர் தேர்வு செய்யப்பட் டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி ஹெரால்ட் பத்திரிகை இந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாடிய முதல் 12 வீரர்களை தேர்வு செய்து, அவர்களைக் கொண்டு டெஸ்ட் அணியை உருவாக்கியுள்ளது.

அந்த அணிக்கு இந்தியாவின் தோனி அணித்தலைவராக தேர்வு செய்யப்பட்டுள் ளார். தோனி தலைமையிலான இந்திய அணி சமீபத்தில் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்று அசத்தியது. இதனால் அவர் அணித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு 8 டெஸ்டில் விளையாடி ஆயிரத்து 134 ஓட்டங்கள் (சராசரி: 70.88) குவித்துள்ள மற்றொரு இந்திய வீரர் கௌதம் காம்பீர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் சதம் விளாசிய தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித், டி வில்லியர்ஸ் இரு வரும் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து அணித்தலைவர் பீற்றர்சன், சைட்பொத்தம், இலங்கை சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் ஆகியோர் அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 12ஆவது வீரராக அவுஸ்திரேலிய சகலதுறை ஆட்டகாரர் சை மண்ட்ஸ் உள்ளார்.

அணி விபரம் வருமாறு, தோனி (இந்தியா, அணித்தலைவர்), சிமித் (தென்னாபிரிக்கா), கௌதம் காம்பீர் (இந்தியா), அம்லா (தென் னாபிரிக்கா), பீற்றர்சன் (இங்கிலாந்து), சந் தர்போல் (மேற்கிந்தியதீவுகள்), டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), சைட்பொத்தம் (இங் கிலாந்து), ஸ்ரையன் (தென்னாபிரிக்கா), ஜோன்ஸன் (அவுஸ்திரேலியா), மெண்டிஸ் (இலங்கை), 12ஆவது வீரர் சைமண்ட்ஸ் (அவுஸ்திரேலியா).

(5)

# குதிரைக்கு ஊக்கமருந்து வழங்கியதால் ஒலிம்பிக் பதக்கத்தை இழந்தது நோர்வே அணி



ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற குதிரை ஊக்கமருந்து எடுத்தது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இதனால் அந்தக் குதி ரையின் சொந்தக்காரர் நோர்வேயைச் சேர்ந்த டோனி ஆந்த்ரே ஹேஹன்சன் (29) பதக்கத்தை பறிகொடுத்தார்.

தான் வென்ற வெண்கலப் பதக்கத்தை இழப்பதுடன் சர்வதேச குதிரையேற்ற சம் மேளனத்தால் நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்க ஓராண்டு தடையையும் அவர் பெற் றுள்ளார். பீஜிங்கில் கடந்த ஆகஸ்டில் 29 ஆவது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. குதிரைப் போட்டிகள் மட்டும் ஹொங்கொங் கில் நடந்தன.

அவற்றில் ''டீம் ஜம்பிங்'' பந்தயத்தில் ஹேஹன்சனை உள்ளடக்கிய நோர்வே குழு பங்கேற்றது. முடிவில், அமெரிக்கா தங்கப் பதக்கத்தையும், கனடாவெள்ளிப் பதக்கத்தை யும் நோர்வே வெண்கலப் பதக்கத்தையும் பெற்றன. ஒவ்வொரு போட்டியின் முடிவிலும் எடுகோளாக ஊக்கமருந்து சோதனை மேற் கொள்ளப்படுவது வழக்கம்.

குதிரைகளுக்கும் அது விதிவிலக்கல்ல. ஊக்கமருந்து சோதனைக் குழுவினரின் கண்ணில் ஹேஹன்சனின் குதிரை காமிரோ சிக்கியுள்ளது. அதிலிருந்து எடுக்கப்பட்ட சிறு நீரில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து இருப் பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. வலிக் காக காமிரோவுக்கு அந்த மருந்தைக் கொடுத் ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சர்வதேச குதிரையேற்ற சம்மேளனத்தின் விசாரணைக்கு உள்ளா னார் ஹேஹன்சன்.

''குதிரையின் உடலில் எந்தவிதமான ஊக்க மருந்தும் இருக்காமல் பாதுகாத்துக் கொள்வது ஒவ்வொரு போட்டியாளரின் கடமை. அதைப் பாதுகாக்கத் தவறியதால் ஹேஹன்சன் உள்ளடக்கிய குழுவினரின் பதக்கம் பறிக்கப்படுகிறது'' என தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

2 நாள் அவரிடம் விசாரணை நடத்தப் பட்டது. பதக்கம் பறிக்கப்பட்டுள்ளதால், அப் போட்டியில் நான்காவதாக வந்த சுவிஸ்சர் லாந்து குழுவுக்கு வெண்கலப் பதக்கத்தை வழங்க சர்வதேச ஒலிம்பிக் குழு முடிபு செய் துள்ளது.

# புகையிரதம் –கார் விபத்து; ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் பலி

## நீர்கொழும்பில் பரிதாபம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு குரனநந்த மாவத்த ரயில் கடவைக்கு அருகில் வைத்து கார் ஒன்று ரயிலுடன்மோதியதில் காரில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கி சென்ற புகையிரதத்துடன் இவர்கள் பயணஞ் செய்த கார் மோதியதனாலேயே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இவர்களில் 4 பேர் ஸ்தலத்திலேயே பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காததால் உயிரிழந்தார். (ந-5)

# வைரப்பனைமரம் சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

திருமதி சந்திரா தனபாலசிங்கம் எழுதிய 'வைரப்பனைமரம்' சிறுவர் கதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன் பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி ப.உரோமகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரமும், மதிப்பீட்டுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் நிகழ்த்த, ஏற்புரையை நூலாசிரியர் திருமதி சந்திரா தனபாலசிங்கம் ஆற்றுவார். (ந)

## புதுக்குடி...

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுக்குடியிருப்பில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று சனிக்கிழமை இரு தடவைகள் விமானப்படையின் கிபிர் மற்றும் மிக்-27 ரக வானூர்திகள் ஐந்து தடவைகளுக்கு மேல் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இத்தாக்குதலில் புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சத்தியசீலன் சத்தியராஜ் (வயது 17), சு.விதுசாயினி (வயது 10) மற்றும் செல்வராஜா செல்வறஞ்சன் (வயது 04) ஆகியோர் காயமடைந்துள்ளனர். (ந-5)

## வவுனியாவில்...

கண்டுபிடிக்கப்பட்டது.இவரது உடல் முழுவதும் பலத்த காயங்கள் காணப் படுவதால் இவர் கொல்லப்பட முன்னர் தடுத்து வைக்கப்பட்டு கடும் சித்திரவதைக்குட்படுத்தப் பட்டிருப்பதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவரது சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.ஆஸ்பத்திரிக்கு சென்ற மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா விசாரணைகளை மேற் கொண்டதுடன் சடலத்தை அடையாளம் காண பொதுமக்களின் உதவியை நாடுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ந-5)



விமானப்படையின் தாக்குதலில் இருந்து தம்மைக் காக்க குழந்தையுடன் தரையில் விழுந்து பாதுகாப்புத் தேடும் குடும்பத்தினரைப் படத்தில் காணலாம்.

## தமிழ் மக்களுக்கு நியாயமான...

சிங்களப் பெரும்பான்மை அரசுக்கு அழுத்தங்கள் ஏற்படுத்தப்படவேண்டும்.

வடபகுதியில் விடுதலைப் புலிகளை முற்று கைப்படுத்தி படையினர்மோதல்களில் ஈடு பட்டுவருகின்றனர். போர் நிறுத்தம், நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப் பட்ட சமாதானப் பேச்சுக்களும் 2006ஆம் ஆண்டு கைவிடப்பட்ட பின்னர் இந்த வருடத்தின் தொடக்கத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவும் விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கப்போவதாக சூளுரைத்திருந்தனர்.

புதிய கெரில்லாப் போர்முறையிலான போரைத் தவிர வேறு ஏதாவது நன்மையை மகிந்தவின் சகோதரரின் படை நடவடிக்கை ஏற்படுத்தும் என்பதற்கு சிறிய அளவிலான சாத்தியங்களே உள்ளன.

அதேசமயம் 2 இலட்சம் மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். பருவமழையும் அவர்களைக் கடும் நெருக்கடியில் தள்ளியுள்ளது.

அன்றாட வாழ்வுக்கு அல்லற்படும் இந்த மக்கள் உதவி நிறுவனங்களின் உதவிகளில் தங்கியுள்ளன. உதவி நிறுவனங்கள் இராணுவத்தின் கடுமையான கட்டுப்பாடுகளின் மத்தியில் இயங்கி வருகின்றன.

இரு தரப்பும் பொதுமக்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இராணுவம் கிராமங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்றவற்றின் மீது வான் குண்டு வீச்சுக்களையும், எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்டு வருகின்றது.

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலை சோமாலியாவில் உள்ள மக்களின் அடிப்படை நிலையை ஒத்தது என பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய நேர்காணலின் போது உலக உணவுத் திட்ட அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் இடம்பெயர்ந்த மக்களின் நகர்வுகளைத் தடுப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஊரடங்கு...

மறுநாள் காலை 4.30 மணிக்கு தளர்த்தப் படுமெனவும் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றிரவு 10 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் கடந்த பலமாதங்களாக இரவு 9 மணிமுதல் அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## புலிகளின் முக்கிய தளங்...

பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவரின் மறைவிடம் மற்றும் விடுதலைப்புலிகள் சந்திக்கும் இடம் என பல இடங்கள் இந்த விமானத் தாக்குதலின்போது சேதமாக்கப் பட்டிருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் முல்லைத்தீவு நகரை அண்டிய முள்ளியவளை, தண்ணீரூற்று, சிலாவத்தை ஆகிய இடங்களை இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

கிளிநொச்சி நகரை நோக்கிய இராணுவத்தின் நகர்விலும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக்கின்றது. (ந-5)

## படையினரின் எறிகணை...

பொன்னம்பலம் (வயது 42) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் அஜந்தா இரண்டு கால்களையும் இழந்துள்ளார். இர ணைமடு மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து விமானப் படையினர் நேற்று நடத் திய தாக்குதல்களில் 8 பொதுமக்கள் காயமடைந்துள்ளதுடன் மக்களின் வீடுகள் பல சேதமடைந்துள்ளன.

சண்முகப்பிரியா (வயது 46),விக்னேஸ்வரன் (வயது 32), சதீஸ்குமார் (வயது 23), துரைசாமி (வயது 57), சத்தியபாமா (வயது 32), தெய்வேந்திரன் (29), விக்னபாலன் (வயது 32), தவராசா (வயது 24) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ந-5)

## கொதிக்கிறது காங்கிரஸ்...

காங்கிரஸ் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியதை அடுத்து பொலிஸார் ந்டவடிக் கை எடுத்தனர். முதல்வரும் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார். நீதிமன்ற அனுமதியின்படி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநாடு சென் னையில் நடந்தது.

எதிர்பார்த்தது போலவே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவுக் கோஷம் அடங்கியது என்றாலும், காங்கிரஸ் எதிர்ப்புப் பேச்சு அடங்கவில்லை. என்பதுதான் காங்கிரஸை கொந்தளிக்க வைத்துள்ளது.

ஈழத்தில் இலட்சம் வீடுகள், கோவில்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு சிலர் ஒருவருக்காக (ராஜீவ்) அழுது கொண்டிருக்கின்றனர்.

நாங்கள் 1.5 இலட்சம் மக்கள் கொல்லப் பட்டது பற்றிபேசுகிறோம் என்று மாநாட்டில் திருமாவளவன் பேசிய பேச்சு, மீண்டும் காங்கிரஸை உசுப்பேற்றும் பேச்சு என்கின்றனர் அதன் தலைவர்கள்.

விடுதலைச் சிறுத்தைகள் தாக்கியிருந்தால், சத்தியமூர்த்திபவனே அங்கு இருந்திருக்காது என்று அந்த மாநாட்டில் பேசிய வன்முறையைத் தூண்டும் பேச்சும் தமிழக காங்கிரஸை ஆத்திரமடைய வைத்துள்ளது.

இக்கட்சியின் காங்கிரஸ் எதிர்ப்புப் போக்குக் குறித்து தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு கூறியதாவது,

எங்களுடைய நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக உள்ளோம். விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் கட்சிகளோடு எங்களுக்கு ஒட்டும் இல்லை,உறவுமில்லை.

கடந்த சில நாட்களாகவே தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஆதரவுக் கட்சிகளின் போக்கு காங்கிரஸுக்கு எதிராக திரும்பியுள்ளதை நாங்கள் அறிவோம்.

அதைச் சந்திக்க நாங்களும் தயாராக இருக்கின்றோம். அந்தக் கட்சிகளுடன் கூட்டணி என்ற பேச்சே இப்போதே எழவில்லை. தேர்தல் நெருங்கும் நேரத்தில் கட்சியின் செயற்குழு கூடி, புலி ஆதரவுக் கட்சிகளை ஒதுக்கி வைப்பது குறித்து விவாதிப்போம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் தி.மு.க கூட்டணியில் உள்ளது. இந்த அணியில் இடம்பெற்றுள்ள பிற கட்சிகளின் முரண்பாடான செயற்பாடுகள் குறித்து தி.மு.க தலைமை தான் முடிவெடுக்க வேண்டும்.

திருமாவளவன் கட்சியின் முந்தைய நடவடிக்கைகள், மாநாட்டுப் பேச்சு ஆகியவை வீடியோ ஆதாரமாக எங்களிடம் உள்ளது.

எங்களின் கட்சியின் செயற்குழு விரைவில் கூடி இதுபற்றி முடிவெடுப்போம். அதன் பின் தி.மு.க தலைமையிடம் எங்கள் நிலைப்பாட்டைத் தெரிவிப்போம் இவ்வாறு தங்கபாலு தெரிவித்தார். (ந-5)

## வன்னியிலிருந்து வந்த...

கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடும் யுத்தம் காரணமாக வன்னியில் இருந்து வந்து நெளுக்குளம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 140 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 420 பேரை அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேற்றுக்காலை நேரில் சந்தித்தபோதே அவர்கள் இக்கோரிக்கையை விடுத்தனர்.

அதிகாரிகள் சகிதம் அங்கு சென்ற அமைச்சரிடம் அந்த மக்கள் மேலும் கூறுகையில்,எமக்கு வழங்கப்பட்டுள்ள இருப்பிட வசதிகள் போதுமானதாக இல்லை. மலசல கூடங்களுக்குப் போதிய நீர் கிடைக்கவில்லை.

வழங்கப்படும் உணவுகள் தரமற்றவை. குழந்தைகளுக்குப் பால்மா இல்லை. எம்மைத் தடுத்து வைக்காது சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும். அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும், வவுனியாவிற்குள் வருமாறு பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனால்,நாங்கள் அடைக்கப்பட்ட அரச நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டு சந்தேக நபர்களாகவே கண்காணிக்கப்படுகின்றோம். வெளியே செல்ல அனுமதிக்கப் படவில்லை.

பலருக்கு மாற்றுடைகள் இல்லை எனவும் நலன்புரி நிலையத்தில் உள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். இதற்குப் பதிலளித்த அமைச்சர், பாதுகாப்பு நடைமுறைகள் சில விடயங்களுக்கு தடையாகவே உள்ளது.

தனித்தனியாக வீடுகள் செட்டிக்குளம், மெனிக்பாமில் அமைக்கப்பட்டு வருகின்றது. விரைவில் அங்கு குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதன் மூலம்அடிப்படை வதிவிட குறைபாடுகள் தீரும். உங்களுடைய அனைத்துப் பிரச்சினைகளையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவருவதுடன். தீர்வுகளும் காணப்படும் என்றார்.

நிலையத்தில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ந-5)

" வலம்புரி " நனநெறி காப்பது. "DMI" கல்விநெறி காப்பது.
DMI (கலை, வர்த்தகப் பிரிவுகள்) A/L 2011 ஜனவரி – 10 காலை 9.00 மணி
நாவலர் வீதி, யாழ்.
DMI ஸ்ரான்லி வீதி, யாழ்.

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2008 இல் ...டு வெளியிடப்பட்டது.